(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

2012, மே 22, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து
2012, மே 11, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012, மே 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0993/ '10

1.
கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எரிவாயுக் கம்பனியானது எப்போது செல் கம்பனி லிமிடட்டிற்கு விற்கப்பட்டது என்பதையும்;

(ii) விற்கப்பட்ட பங்குகளின் விலையையும் வீதத்தையும்;

(iii) எரிவாயுக் கம்பனியை விற்றபோது ஆட்சியிலிருந்த சனாதிபதியின் பெயரையும் அரசாங்கத்தையும்;

(iv) விற்ற திகதியிலிருந்து மீளக் கொள்வனவு செய்த திகதி வரையில் அரசாங்கத்திற்குக் கிடைத்த இலாபத்தினையும்;

(v) செல் டேர்மினலிலே அரசாங்கம் கொண்டுள்ள பங்கினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செல் கம்பனி லிமிடட்டின் பங்குகளை மீளவாங்குவதற்கு அரசாங்கம் செலுத்திய விலையினையும்;

(ii) அரசாங்கம் மீளவாங்கிய பங்குகளின் வீதத்தையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட இந்த மீள் கொள்வனவு எப்போது மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) விலைப் பெறுமதி குறித்து எவ்வாறு இணக்கம் காணப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1301/ '11

2.
கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை மற்றும் பெலிஅத்த ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளையும் அண்மித்ததாக உள்ள நலகம வில்அத்தர எனும் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த நாமயால ஏரி அமைந்துள்ளது என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டில் மேற்படி ஏரியும், அதனைச் சூழவுள்ள காணிகளும் குடிநீர் கருத்திட்டமொன்றுக்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி இடத்தில் தங்காலை – பெலிஅத்த இணைந்த நீர் வழங்கும் திட்டம் எனும் பெயரில் நீர் கருத்திட்டமொன்றுக்காக 2005.10.05 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரை மேற்படி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் கருத்திட்டத்தின் ஊடாக நீர் வழங்க திட்டமிடப்பட்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அதன் வேலைகளை துரிதமாக ஆரம்பித்து பிரதேச மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) அதற்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நீர் வழங்கல் திட்டம் காரணமாக காணிகளை இழந்துள்ள மக்களுக்கு காணிகளை வழங்குவதற்காக தகுந்த முறையியலொன்று தயாரிக்கப்படுமா?

(ii) அவ்வாறாயின், அது யாது?

(ஈ) இன்றேல், ஏன்?

1621/ '11

3.

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் தற்போதைய உயர்மட்ட உத்தியோகத்தர் சபையிலும் பணிப்பாளர் சபையிலும் பணியாற்றுபவர்கள் யாவர்;

(ii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும், பணிப்பாளர் சபை உறுப்பினரதும் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் யாவை;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் சம்பள அளவுகள், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டுக்கான ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 5.6 பில்லியன் சொத்துக்கள் நிலுவை காணப்படுகின்றதா;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1985/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரைலும் மற்றும் 2011ஆம் ஆண்டிலும் மதுபான விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2005ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மதுபான உரிமப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) மதுபான விற்பனைக்கான உரிமப்பத்திரங்களை வழங்குகையில் பின்பற்றப்படும் நடைமுறை யாது;

(iv) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில், மதுபான விற்பனை நிலைய உரிமப்பத்திரங்களை வழங்குதன் மூலம் அரசாங்கம் ஈட்டிய வருமானம் வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மதுபான விற்பனைக்காக உரிமைப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இதில் எதிர்காலத்தில் உரிமப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை யாது;

(iii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

2000/ '11

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிமல் புஞ்சிஹேவா என்பவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதவியொன்று வகிப்பதை ஆரம்பித்த திகதி யாதென்பதையும்

(ii) இவர் பிறந்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நபர் 60 வயதைத் தாண்டிய பின்னரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேவையாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எப்போது என்பதையும்;

(v) இவ்வாறான அங்கீகாரம் வழங்கப்படவில்லையெனின் 60 வயதை தாண்டிய திகதி தொடக்கம் இன்று வரை மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சட்டத்திற்கு முரணான விதத்திலேயே சேவையாற்றியுள்ளார் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி நபர் தொடர்பில் எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2017/ '11

6.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நிர்மாணத்துறை,பொறியியல் சேவைகள் வீடமைப்பு ,பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புனித பிரதேசங்களுக்கருகில் அனுமதியின்றி வசிக்கும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கின்ற கருத்திட்டமொன்று நடமுறையில் உள்ளதா;

(ii) ஆமெனில், எந்த புனித பிரதேசங்களை மையமாகக் கொண்டு மேற்படி கருத்திட்டம் நடமுறைப்படுத்தப்படுகின்றது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2031/ '11

7.

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்களின் இணைந்த நிறுவனங்களாக வெளிக்காட்டிக்கொண்டு குறித்த பல்கலைக்கழகங்களின் பெயரின் கீழ் இயங்கி வரும் அநேகமான தனியார் கல்வி நிறுவனங்கள் தற்போது இலங்கையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அரச பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியை இழந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் மேற்படி கல்வி நிறுவனங்களில் அனுமதியைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்பதையும்;

(iii) இவர்களில் வசதியில்லாத சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் இருக்கின்றார்கள் என்பதையும்;

(iv) மேற்படி ஒருசில கல்வி நிறுவனங்கள் வெறுமனே பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மாத்திரம் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(v) ஒருசில கல்வி நிறுவனங்கள் எந்தவோர் அங்கீகாரமும் இல்லாத சான்றிதழ்களை வழங்கியுள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போது பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்களின் பெயர்களின் கீழ் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான தொகைமதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்தகைய நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அவ்வாறான கல்வி நிறுவனங்களை பேணிவருவதற்குத் தேவையான பண்பையும் தரத்தையும் பரிசீலித்து முறைசார்ந்த பதிவொன்றைப் பெற்றுக்கொள்வதை கட்டாயமாக்கும் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2109/ '11

8.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலதாரி ஹோட்டல் லங்கா பிஎல்சி, லாப்ஸ்கேஸ் (Laugh Gas) பிஎல்சி மற்றும் சிலோன் கிரைன் எலிவேடர்ஸ் (Ceylon Grain Elevators) ஆகியவற்றில் ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) பங்குகளின் தொகுதி ஒவ்வொன்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(v) பங்குகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்கப்பட்ட நபர்களின் பெயர்களை பங்குத் தொகுதி அடிப்படையிலும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட பங்குகளின் ஒவ்வொரு தொகுதியும் விற்கப்பட்ட விலையையும்;

(vii) இக்கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்ட தரகர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், என்?

2156/ '11

9.

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை, கிரிமெற்றிதென்ன பிரதேசத்தில் அமைந்துள்ள பீங்கான் ஓட்டுத் தொழில்சாலை சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி தொழில்சாலை பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியிருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தை மூடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தை மூடும் போது அதில் சேவையாற்றிய அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்குக் காரணமாயமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) பிரதேச மக்களினதும், நாட்டினதும் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக மேற்படி தொழில்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கென திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1650/ '11

10.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அக்குறஸ்ஸ, அத்துரலிய பிரதேச சபையின் கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக நிதி வழங்கிய நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) இதற்காக மதிப்பிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) அத்துரலிய கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவு செய்யப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1740/ '11

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றைவரை வருடவாரியாக,

(i) சீனியின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் பெறுமதியையும்;

(v) சீனி இறக்குமதியாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் 1கிலோகிராம் சீனிக்கான உற்பத்திச் செலவினத்தையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1 கிலோகிராம் சீனியின் மீது விதிக்கப்பட்ட எல்லா (நேரடி மற்றும் மறைமுக) வரிகளையும்

அவர் தனித்தனியாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1986/ '11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ள தனியார் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இக்கம்பனிகளின் பெயர்களும் அவை உரியதாயுள்ள அமைச்சுக்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியிலும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாக வுள்ள பங்குகளின் சதவீதம் மற்றும் தனியார் துறையினால் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் சதவீதம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தனியார் முதலீட்டாளர்களின் பெயர்களும் முகவரிகளும் ஒவ்வொரு கம்பனி வாரியாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1651/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் அட்டகலகம்பன்ன பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்கு உட்பட்ட ஹிரமடலகம மத்திய மருந்தகம் மூடப்பட்டுள்ளதையும்;

(ii) இதனால் பிரதேச மக்களுக்கு பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்:

அவர் அறிவாரா?

(ஆ) (i) புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சீரான நிலையில் இருந்த போதிலும் மேற்படி மருந்தகத்தை மூடிவிடுவதற்கு காரணமான விடயங்கள் யாதென்பதையும்;

(ii) மேற்படி மருந்தகத்தை துரிதமாக திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1741/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றைவரை வருடவாரியாக,

(i) பருப்பின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் அளவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் பெறுமதியையும்;

(v) பருப்பு இறக்குமதியாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில், 1 கிலோகிராம் பருப்பிற்கான உற்பத்திச் செலவினத்தையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பருப்பு ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட (நேரடி மற்றும் மறைமுக) வரிகள் அனைத்தையும்

தனித்தனியாக அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1987/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டளவில் உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்த தனியார் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாதுகாப்பு நிறுவனத்தினாலும் பாதுகாப்பு வழங்கப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் தற்போது செலுத்தப்படும் பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் மாதாந்தம் பாதுகாப்புக்காக செலவிடும் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தி மற்றும் 1985ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க மற்றும் 1987ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 4ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2012 ஏப்பிறல் மாதம் 18ஆம் திகதிய 1754/9ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

சமூக சேவைகள் அமைச்சர்,— முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 17ஆம் 18ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் சமூக சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 மார்ச்சு மாதம் 16ஆந் திகதிய 1750ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.08ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 23ச ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதிய 1738/37ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2 0 12. 0 5 .11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 04.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.3 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.03

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத களஞ்சிய முற்பணக் கணக்கு - இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 1,000,000,000 இலிருந்து ரூபா. 1,700,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — ரூபா. 4,838,000,000 இலிருந்து ரூபா. 5,037,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 800,000,000 வரை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 05.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 27இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.27

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலஞ்சத்தைக் கண்டுபிடிப்பதற்காக இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு முற்பணம் - இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை கண்டுபிடிப்பதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — ரூபா. 7,500,000 இலிருந்து ரூபா. 12,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 06

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 42இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.42

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "ஏனைய அரசாங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய முற்பணம் - அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 4,600,000 இலிருந்து ரூபா. 4,750,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — ரூபா. 4,600,000 இலிருந்து ரூபா. 4,450,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 07.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 43இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.43

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "கமத்தொழில் பண்ணைகளின் பராமரிப்பும் விதை விற்பனை முற்பணக் கணக்கு - கமத்தொழில் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 300,000,000 இலிருந்து ரூபா. 355,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — ரூபா. 270,000,000 இலிருந்து ரூபா. 292,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 08.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 44இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.44

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “அரசாங்க தொழிற்சாலையின் களஞ்சிய முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 172,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — ரூபா. 10,000,000 இலிருந்து ரூபா. 31,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 09.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 45இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.45

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அரசாங்க தொழிற்சாலையில் செய்த வேலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 345,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 46இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.46

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல் பிரச்சாரம் மற்றும் விற்பனைக்காக பயன்படுத்துவதற்கு முற்பணம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — ரூபா. 2,900,000,000 இலிருந்து ரூபா. 2,300,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 900,000,000 வரை

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2010ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. (பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2010 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2011 தொடர்பில், 2010 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | பாதுகாப்பு அமைச்சு | 10301 | 48,670,000 | 238,670,000 | 17,600,000 | 117,600,000 | 200,000,000 | 560,000,000 | 1 |
| 2. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 10601 | - | - | - | - | 10,000,000 | 13,000,000 | 2 |
| 3. | அமைச்சரவை அலுவலகம் | 00501 | 1,256,000 | 1,800,000 | - | - | - | - | 4 |
| 4. | பொலிஸ் திணைக்களம் | 22501 | 1,686,297,000 | 1,496,297,000 | 1,100,000,000 | 1,000,000,000 | - | - | 5 |
| 5. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 12701 | 27,475,000 | 11,475,000 | 8,500,000 | 2,000,000 | - | - | 6 |
| 6. | அஞ்சல் திணைக்களம் | 30801 | - | - | 525,000,000 | 480,000,000 | - | - | 7 |
| 7. | கமநல சேவைகள் வனசீவராசிகள் அமைச்சு | 17901 | - | - | - | - | 2,000,000 | 20,000,000 | 8 |
| 8. | தொழில் திணைக்களம் | 22101 | - | - | - | - | 160,000,000 | 240,754,151.36 | 9 |
| 9. | சிவில் பாதுகாப்பு அமைச்சு | 32001 | 141,300,000 | 170,000,000 | - | - | - | - | 10 |
| 10. | கமத்தொழில் அமைச்சு | 11801 | - | - | 8,500,000 | 7,900,000 | - | - | 11 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11. | நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு | 15201 | - | - | 7,000,000 | 5,000,000 | - | - | 12 |
| 12. | உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு | 18101 | 1,000,000 | 17,000,000 | - | - | 2,000,000 | 55,500,000 | 13 |
| 13. | விசேட செயற்பாடுகளுக்கான பணியகம்(சிரேஷ்ட அமைச்சர்கள்) | 00301 | - | - | - | - | 2,000,000 | 5,700,000 | 14 |
| 14. | சிவில் விமானச் சேவைகள் அமைச்சு | 17601 | - | - | 3,300,000 | 2,008,661 | - | - | 15 |
| 15. | மாவட்ட செயலகம், கொழும்பு | 25501 | - | - | 34,000,000 | 32,800,000 | 180,000,000 | 190,000,000 | 16 |
| 16. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 64,000,000 | 57,500,000 | - | - | 17 |
| 17. | மாவட்ட செயலகம், கேகாலை | 27901 | - | - | 32,500,000 | 29,000,000 | - | - | 18 |
| 18. | மாவட்ட செயலகம், வவுனியா | 26601 | - | - | 7,500,000 | 6,700,000 | - | - | 19 |
| 19. | மாவட்ட செயலகம், மட்டக்களப்பு | 26901 | - | - | - | - | 67,000,000 | 89,000,000 | 20 |
| 20. | போக்குவரத்து அமைச்சு | 11401 | - | - | 4,500,000 | 3,500,000 | - | - | 21 |
| 21. | அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 17301 | - | - | - | - | 2,500,000 | 6,535,000 | 22 |
| 22. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு | 18201 | - | - | - | - | 2,000,000 | 6,000,000 | 23 |
| 23. | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 14201 | 23,550,000 | 23,050,000 | 12,000,000 | 1,400,000 | 80,000,000 | 26,000,000 | 24 |
| 24. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | - | - | 5,900,000 | 5,700,000 | - | - | 25 |
| 25. | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மேம்பாட்டு அமைச்சு | 18001 | - | - | - | - | 2,000,000 | 5,800,000 | 26 |
| 26. | தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு | 18401 | - | - | - | - | 2,000,000 | 3,700,000 | 28 |
| 27. | கலாசாரம் மற்றும் கலை அமைச்சு | 17701 | 1,000,000 | 1,500,000 | 300,000 | 10,900,000 | 2,000,000 | 73,000,000 | 29 |
| 28. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 10201 | - | - | 11,000,000 | 8,000,000 | - | - | 30 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | மதிப்பீட்டுத் திணைக்களம் | 25001 | - | - | - | - | 28,000,000 | 60,000,000 | 31 |
| 30 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 23801 | - | - | 1,200,000 | 1,100,000 | 8,000,000 | 9,125,000 | 32 |
| 31. | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 23701 | 7,065,000 | 4,000,000 | - | - | - | - | 33 |
| 32. | தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 17801 | - | - | - | - | 2,000,000 | 2,750,000 | 34 |
| 33. | உயர் கல்வி அமைச்சு | 17101 | - | - | 4,900,000 | 2,800,000 | - | - | 35 |
| 34. | தேர்தல்கள் திணைக்களம் | 02001 | - | - | 16,000,000 | 13,000,000 | - | - | 36 |
| 35. | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 13501 | - | - | 3,200,000 | 3,164,317 | - | - | 37 |
| 36. | தபால் சேவைகள் அமைச்சு | 10801 | - | - | 2,400,000 | 2,300,000 | - | - | 38 |
| 37. | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 11701 | - | - | - | - | 25,000,000 | 27,000,000 | 39 |
| 38 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 01301 | - | - | 292,000 | 0.00 | - | - | 40 |
| 39. | மீள்குடியேற்ற அமைச்சு | 14501 | - | - | 4,000,000 | 3,825,000 | - | - | 41 |
| | மொத்தம் | | 1,937,613,000 | 1,963,792,000 | 1,873,592,000 | 1,796,197,978 | 776,500,000 | 1,393,864,151.36 | |

20012 ஏப்பிறல் 18 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 16.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 19.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

20.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2012, மே 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0995/ '10

1\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குற்றவாளியென தீர்ப்புக்கூறப்பட்ட மக்களுக்கு மன்னிப்பளிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும்;

(iii) விடுதலை செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட நியதிகளையும்;

(iv) விடுதலை செய்யப்பட்ட வேளையில் ஒவ்வொருவரும் தனது தண்டனைக் காலத்தின் எப்பகுதியை பூர்த்தி செய்திருந்தனர் என்பதையும்;

(v) கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஏதேனுமொரு அரசியல்வாதி அல்லது தொடர்புடைய நபர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1320/ '11

2\.

கௌரவ புத்திக பதிரண,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் புத்தளம்—கற்பிட்டி வீதியின் ஆலங்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள காணிப் பதிவு அலுவலகத்தில் வரைபட இலக்கம் 2396 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஏறக்குறைய நானூறு ஏக்கர் காணி போலி உறுதி தயாரித்து பார் ரீப் ரிசோர்ட்ஸ் பிரைவேட் லிமிரெட் நிறுவனத்தினால் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது இக்காணியில் ஆலங்குடா எனும் பெயரில் சுற்றுலாத்துறை ஹோட்டலொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிக்கான போலி உறுதி தயாரிக்கப்பட்டு உரிமை பெறப்படும் வரை அது பற்றி அரசாங்க உத்தியோகத்தர்களை விசாரித்தறியாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த போலிக் காணிக் கொடுக்கல் வாங்கல் பற்றி முறையான விசாரணையொன்று நடாத்தி அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியை மீளப் பெற அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) முறையான விசாரணை மேற்கொள்வதை ஆரம்பிக்கும் திகதி யாது என்பதையும்;

(iv) இதனோடு தொடர்புடைய தவறாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1735/ '11

3.

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மாணவர்களுடைய எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகம் மற்றும் ஒவ்வொரு பாடநெறிக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பீடத்திற்குமாக இணைத்துக்கொள்ளப்பட்ட மேற்படி மாணவர் எண்ணிக்கையானது 2011ஆம் கல்வி ஆண்டுக்காக அந்தந்தப் பீடங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு மாணவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்காகவும் அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதனூடாக அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்குக் கிடைத்த வருமானம் யாதென்பதையும்;

(iii) அந்தப் பணம் எப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) குறித்த பணம் அரசின் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1988/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழு தற்போது செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அது செயலிழந்த திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி ஆணைக்குழுவுக்கு கட்டிட வசதிகள் பெற்றுக் கொடுப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின் மேற்படி இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் யாரென்பதையும்;

(iv) மேற்படி கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் மாதாந்த வாடகை எவ்வளவென்பதையும்;

(v) நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய வசதிகளுக்காக மாதாந்தம் செலுத்தப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களது சம்பளங்ளுக்காக மாதாந்தம் செலவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்த நாள் முதல் இன்று வரை இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

1996/ '11

5\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கே உரித்தான மலர்ச்செடி வகைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய மலர்ச்செடி வகைகளின் எண்ணிக்கை யாது;

(iii) இலங்கைக்கே உரித்தான தாவர வகைகளின் எண்ணிக்கை யாது;

(iv) அதில், சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய தாவர வகைகளின் எண்ணிக்கை யாது;

(v) சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய இலங்கைக்கே உரித்தான விலங்கினங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிங்கராஜ உலக மரபுரிமை வன பாதுகாப்புப் பிரதேசத்திற்கு சுவீகரிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வனப் பிரதேசத்தின் ஊடாக, இலும்பகந்தையிலிருந்து சூரியகந்தைக்கு புதியதொரு பாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி பாதையின் நீளம் யாது;

(iii) மேற்படி பாதை நிர்மாணிக்கப்பட்டமையால் சிங்கராஜ வன பாதுகாப்புப் பிரதேசத்தின் தாவர மற்றும் விலங்கினங்களுக்கு பாதகமான தாக்கம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) மேற்படி பாதை நிர்மாணிக்கப்படுவதைத் தடுப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி பாதை நிர்மாணிக்கப்படுவதால், தற்போது ஏற்பட்டுள்ள சேதத்தினை குறைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2015/ '11

6.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் காரணமாக 2010 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தனிநபர் மரணங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வருடத்தில் புகையிரத விபத்துக்கள் காரணமாக அங்கவீனர்களான நபர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மரணங்களையும் விபத்துக்களையும் தடுப்பதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2157/ '11

7.

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ரன்வல அரசாங்க வைத்தியசாலை மூடப்படும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் மருத்துவர்கள் மற்றும் ஏனைய பதவியணியின் அலுவலர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(iii) தற்போது அங்கு ஒரு மருத்துவர் மாத்திரமே சேவையாற்றுகிறார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து மற்றும் வெளிவாரியாக சிகிச்சை பெறுகின்ற தற்போதைய நோயாளர்களின் சராசரி எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பதவியணியினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) ரன்வல அரச வைத்தியசாலை இந்நிலைமைக்கு உள்ளாவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் பதவியணியினரை துரிதமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2262/ '12

8.

கௌரவ அக்கில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டின் இறுதியளவில் இலங்கையில் அறியவந்திருந்த இருதய நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் அரச மருத்துவ மனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த மருத்துவ மனைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிகிச்சையை செய்துகொள்ளும் பொருட்டு காத்திருப்போர் பட்டியலிலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நோயாளர்கள் காத்திருப்போர் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2267/ '12

9.

கௌரவ சஜித் பிரேமதாச,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை விளையாட்டுத்துறைக் கிராமத்தை அமைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரதேசம் யாது;

(ii) மேற்படி விளையாட்டுத்துறைக் கிராம கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் காரணமாக இடம்பெயரும் குடும்பங்களின் எண்ணிக்கை, இழக்க நேரிடும் வாவிகளின் எண்ணிக்கை மற்றும் வயற்காணிகளின் அளவு யாது;

(iii) இடம்பெயரும் விவசாயக் குடும்பங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1652/ '11

10.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் பல வருடங்களாக இடைவிடாது சேவையில் ஈடுபடும் பாடசாலை கல்விசாரா ஊழியர்களின் சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும்;

(ii) 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட இவர்கள் இதுவரை சிறியதொரு நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்விசாரா ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ள நிலையிலும் இவர்களது சேவையை நிரந்தரமாக்காமலிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காரணங்களை தவிர்த்து இவர்களை நிரந்தர ஊழியர் குழாமில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1742/ '11

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) அரிசியின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களின் போது அரிசியின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியை வெவ்வேறாகவும்;

(iii) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் அரிசி இறக்குமதியாளர்கள், நெற்பயிற்செய்கையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் ஒரு கிலோகிராம் அரிசிக்கான உற்பத்திச் செலவையும்;

(ii) நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(iii) இறக்குமதிசெய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசிக்கு விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2008/ '11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் கிரிக்கட் அணி இலங்கைக்கு வருகை தந்த திகதியும் இலங்கையிலிருந்து வெளியேறிய திகதியும் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சுற்றுப்பயணத்தின் போது போக்குவரத்துக்காக ஏதேனும் நிறுவனம் அல்லது நிறுவனங்களிலிருந்து வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனின், பெற்றுக்கொண்ட மேற்படி வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) (i) மேற்படி சுற்றுப்பயணத்தின் போது போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(ii) இதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனின், விலைமனுக்கள் கோரப்பட்ட நிறுவனங்களுக்கு புறம்பாக வேறு நிறுவனங்கள் போக்குவரத்து சேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1653/ '11

13.

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின் தலாவ பிரதேச செயலாளர் பிரிவின் கண்டகுளம் மற்றும் கதுறுகஸ்வெவ ஆகிய கிராமங்களுக்கு குடி நீர் வசதிகளை செய்து கொடுப்பதற்காக இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் சமுதாய நீர் வழங்கல் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சமுதாய நீர்வழங்கல் திட்டத்தின்,

(i) நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) நிர்மாணிப்புகளை பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ள திகதி யாது என்பதையும்;

(iii) பூர்த்தி செய்வதற்கு செலவிட உத்தேசித்துள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) நிர்மாணிப்புகளுக்கு வெளிநாட்டு நிதிகள் பயன்படுத்தப்பட்டிருப்பின், அந்நிதியை வழங்கிய நிறுவனங்கள் அல்லது நிறுவனம் யாது என்பதையும்;

(v) உள்நாட்டு நிதி பெறப்பட்டிருப்பின், அதற்காக பின்பற்றப்பட்ட முறைமையியல் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை துரிதமாக பூர்த்தி செய்து பிரதேச மக்களின் குடி நீர்த் தேவையை நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1743/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் தகரத்திலடைக்கப்பட்ட மீனுக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2009/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரன்மிஹிதென்ன சினிமா கிராமம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்களை கொண்டுள்ளது என்பதையும்;

(ii) இக்கிராமம் திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) திறந்து வைக்கப்பட்ட திகதி முதல் இன்று வரை மேற்படி சினிமா கிராமம் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிப்பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி நிறுவனத்திற்கு கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரன்மிஹிதென்ன சினிமா கிராமத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் அல்லது திரைப்படங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆக்கத்தினதும் இயக்குனர், தயாரிப்பாளர் அல்லது தயாரிப்பில் ஈடுபட்ட நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 மே 24, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1063/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சீனா, அமெரிக்கா, இந்தியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளினாலும் நிறுவனங்களினாலும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்பட்ட கடன்கள் அல்லது மானியங்களின் காலப்பகுதியின் முடிவின் போது செலுத்தப்படவுள்ள மொத்தத் தொகையினை அமெரிக்க டொலர்களிலும்;

(ii) இக்கடன்களின் சராசரி மீளச் செலுத்தல் கால அளவினை நாடுகள் அல்லது நிறுவனங்கள்வாரியாக வெவ்வேறாகவும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1322/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் கரன்தெனிய தேர்தல் தொகுதியிலுள்ள அனுருத்தகம ஜன உதான கிராமம் 1999 ஆம் ஆண்டில் மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது என்பதையும்

(ii) இக்கிராமத்தில் பெரும்பாலான வீடுகளின் உரிமையாளர்கள் இதுவரை இவ்வீடுகளில் குடியிருப்பதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வீடுகளில் குடியிருக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(இ) (i) அனுருத்தகம ஜன உதான கிராமத்தின் வீடுகள் தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடாத்தி பிரதேசதத்தின் வீடுகளற்ற வறிய குடும்பங்களுக்கு கைவிடப்பட்டுள்ள வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1448/ '11

3.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சனாதிபதி அவர்களின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1997/ '11

4.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004.07.22ஆம் திகதிய PS/CS/26/2004 ஆம் இலக்க அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம், சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்புக்கு இணைந்ததாக அதிலிருந்து ½ கிலோ மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ள, காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான அனைத்து வனங்களையும், 1972ஆம் ஆண்டின் காணி சீர்திருத்தச் சட்டத்தின் 22(1) (ஊ) மற்றும் 44(ஐ) வாசகத்தின் பிரகாரம், வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஒப்படைப்பதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ii) குறிப்பிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் 2508.4 ஹெக்டெயார் வனப் பிரதேசத்தை புதிதாக சிங்கராஜ வனத்திற்கு சேர்ப்பதற்கு உத்தேசமாயுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2020/ '11

5\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சிறைச்சாலைக் காவலர் – வகுப்பு இரண்டு மற்றும் நலனோம்புகை அலுவலர் – வகுப்பு இரண்டு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய அபேட்சகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களுக்கு, குறித்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தற்போது ஆட்சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஆட்சேர்க்கப்பட்ட ஆகக் குறைந்த வெட்டுப் புள்ளி யாது என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்டவாறு ஆட்சேர்க்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(vi) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கு மேலதிகமாக வேறு ஆட்கள் ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vii) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2181/'11

6\.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவைகள்,வனசீவராசிகள் அமைச்சின் கீழுள்ள ஏதேனும் நிறுவனத்தினால் இற்றைவரை பழக்கப்பட்டுள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இனி வரும் காலத்தில் பழக்குவதற்காக இனங்காணப்பட்டுள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) யானை – மனித மோதல்களை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சினால் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) காட்டு யானைகளை பழக்குவதற்காகவும் யானை – மனித மோதல்களை கட்டுப்படுத்துவதற்காகவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2268/ '12

7.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இலங்கையில் பராமரிக்கப்படும் நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை நீர்ப்பாசன புனரமைப்பின் கீழ் குளங்களை பராமரிப்பதற்காக மேற்படி திணைக்களம் செலவிட்டுள்ள பணத் தொகை ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இதனடிப்படையில் ஒவ்வொரு ஆண்டுக்குமாக போதியளவு பணம் செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1468/ '11

8.

கௌரவ அஜித் குமார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சுற்றாடல் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1654/ '11

9\.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரங்கெத்த பிரதேச சபைக்கு உரித்தான கங்கபளாத்த எச்.எம்.பீ. பண்டா ஞாபகார்த்த நூலகம் தற்போது சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நூலகக் கட்டடம் மறுசீரமைக்கப்படாமை காரணமாக கூரை, கதவுகள், யன்னல்கள் மற்றும் மின்சாரக் கம்பி முறைமை பெருமளவு சேதமடைந்துள்ளதென்பதையும்;

(iii) நூலகம் மூடப்பட்டுள்ளதனால் ஆயிரத்திற்கும் அதிகமான வாசகர்கள் புத்தகங்களை வாசிக்கும் வாய்ப்பை இழந்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) துரிதமாக மேற்படி நூலக கட்டடத்தை மறுசீரமைத்து வாசகர்களிடம் உரிமையை கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1744/ '11

10\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (இபெகூ) பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் நடவடிக்கைமுறையையும்;

(ii) மேற்படி நடைவடிக்கைமுறைக்கு அதிகாரமளிக்கும் முகவரையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டு யூன் மாத இறுதியிலிருந்து யூலை மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் குறைந்த தரத்திலான பெற்றோல் இறக்குமதி செய்வதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நடாத்தப்பட்ட ஆரம்பகட்டப் பரிசீலனையை குறைந்த தரத்திலான பெற்றோல் எவ்வாறு திருப்திப்படுத்தியது என்பதையும்;

(iii) அதைத்தொடர்ந்து அதன் தரம் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களில் அமையவில்லை என உறுதிசெய்வதற்கு அது எவ்வாறு மாற்றப்பட்டது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) குறைந்த தரத்திலான பெற்றோல் பாவனையின் காரணமாகப் பாதிப்படைந்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(ii) இம் மோசடியில் ஈடுபட்ட ஆட்களையும்;

(iii) மேற்படி மோசடி காரணமாக வரிசெலுத்துபவர்களுக்கு ஏற்பட்ட செலவினம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2004/ '11

11.
கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை மற்றும் 2011.01.01 முதல் 2011.09.01 வரையான காலப்பகுதியில் களுத்துறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டுக்காக களுத்துறை மாவட்டத்தில் மதுபான உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் முகவரிகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2021/ ' 11

12.
கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதுள்ள முப்படை வீரர்களின் குடும்பங்களது எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2011 இன் வரவு செலவுத் திட்ட முன்மொழிவொன்றான படைவீரர்களின் குடும்பமொன்றில் பிறக்கின்ற மூன்றாவது பிள்ளைக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கின்ற முன்மொழிவின் கீழ் இதுவரை மேற்படி கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்காக இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவை முன்வைக்க முன்னர் மூன்றாவது குழந்தையொன்று இருந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும் மேற்படி நலன் பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதையும்;

(iv) இதுவரை, மேற்படி கொடுப்பனவு வழங்கப்படவில்லையாயின், அதனை வழங்குவதற்கு ஆரம்பிக்கின்ற திகதி யாது என்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவை வழங்குவதானது எவ்வளவு காலம் வரை அமுலிலிருக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1655/ '11

13.
கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் பன்வில அலவத்துகிறிகமவில் அமைந்துள்ள கண்டி இராச்சிய காலகட்டத்திற்கு உரித்தான பண்டைய விஹாரையின் தொல் பொருட்கள் பல வருடங்களாக சேதமடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) தொல் பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்கள் மேற்படி தொல் பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவித்து பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் இது வரை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விஹாரையை தொல் பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்கள் பரிசீலனை செய்துள்ள போதிலும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப் படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி விஹாரையின் மறுசீரமைப்பு பணிகள் எதிர்வரும் காலத்தில் ஆரம்பிக்கப்படுமாயின், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1745/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கட் சுற்றுப் போட்டிக்கான செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட செயலாளரின் பெயரையும்;

(ii) மேற்படி நியமனம் யாரால் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) இந் நியமனத்திற்கு வேறு நபர்கள் எவரேனும் பரிசீலிக்கப்பட்டனரா என்பதையும்;

(iv) அவ்வாறெனின், அவர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) உலகக்கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டிக்கான செயலகத்தின் செயலாளர் பதவிக்கு வழங்கப்படடிருந்த தத்துவங்களையும்;

(ii) அப்பதவிக்குரித்தான அதிகாரங்களை அவர் நிறைவேற்றினாரா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2022/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கனேவத்த பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் கனேவத்த பொத்துவாகொன்ன வீதியை மறுசீரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) காபட் இடப்பட்டு அல்லது வேறு விதத்தில் மறுசீரமைக்கப்படும் மேற்படி வீதியின் அகலம் மற்றும் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கான மதிப்பீட்டின் படி நிர்மாணிக்கப்படவேண்டிய பாலங்களினதும் மதகுகளினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) பொத்துவாகொன்ன வீதியை மறுசீரமைப்பதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்படும் போது முறையான கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டவரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதி மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் நிலவிய அகலம் எவ்வளவென்பதையும்;

(ii) வீதியை நிர்மாணித்து முடித்ததன் பின்னர் இதற்காக செலவாகிய மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2012 மே 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1064/ '11

1\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009, 2010, 2011 இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், மானியங்களை தனித்தனியாகவும் மொத்தமாகவும் எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே கூறப்பட்டவாறு பெறப்பட்ட கடன்கள் மானியங்கள் எக் கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பெறப்பட்ட கடன்களின்,

(i) அனைத்தும் உள்ளடங்கிய சராசரி வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) கடன் காலப்பகுதியின் முடிவில் மொத்த வட்டி மற்றும் கடன் கட்டணம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1167/ ' 11

2\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் ஐ.ஓ.சீ. (IOC) எனும் இந்தியக் கம்பனிக்கு வரி விடுப்பு அடிப்படையில் 100 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டுமா;

(iii) ஆமெனில், 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரியின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எரிபொருள் நிரப்பும் நிலையங்களினால் செலுத்தத் தவறிய வரியை அரசாங்கத்திற்குச் செலுத்துமாறு இலங்கை முதலீட்டுச் சபை ஐ.ஓ.சீ கம்பனிக்கு அறிவித்துள்ளதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) அக்கம்பனி வரி செலுத்த வேண்டியதில்லையென முதலீட்டுச் சபையின் தவிசாளராலேயே சம்பந்தப்பட்ட கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

(v) அத்தகைய அறிவித்தல் வழங்கியமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஐ.ஓ.சீ. கம்பனி அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த தவறியமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1327/ '11

3\.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கண்டி மாவட்டத்தின் பொத்தபிட்டிய வீதியில் மெனித்தவேலவில் இருந்து திஸ்மட வரையான பகுதியைப் புனரமைக்கும் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டு ஏறக்குறைய ஒரு வருடகாலம் கழிந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(ii) மேலே உள்ளவாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்படக் காரணம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் புனரமைப்புப் பணிகளைத் துரிதமாக ஆரம்பித்து பகுதிவாழ் மக்களின் போக்குவரத்து வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1776/ '11

4\.

கௌரவ அஜித் குமார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) போப்பே – போத்தல பிரதேச சபைத் தலைவர் பயன்படுத்துகின்ற உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை செலவிடப்பட்டுள்ள,

(i) எரிபொருள் செலவினம்;

(ii) பராமரிப்புச் செலவினம்;

(iii) சாரதிகளுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான "பொதுச் சந்தைகளின்" எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இந்த ஒவ்வொரு மக்கள் சந்தையிலிருந்தும் 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கிடைத்த வருடாந்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை யாவையென்பதையும்;

(iii) பிரதேச சபை நிதியத்திலிருந்து மேற்படி முன்பள்ளிகளுக்காக 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வருடாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான நூலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1998/ '11

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நிமல் புஞ்சிஹேவா என்பவர்,

(i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராகப் பணிபுரிந்து சம்பளம் பெறுகிறார் என்பதையும்;

(ii) இதற்கு மேலதிகமாக இவர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் (சட்டம்) ஆகவும் பணிபுரிந்து சம்பளம் பெறுகிறார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நிமல் புஞ்சிஹேவா என்பவரின் வயது 60 ஐ தாண்டியுள்ளதா;

(ii) அரசாங்கப் பதவிகள் இரண்டை ஒரே தடவையில் வகிப்பதற்கு நிமல் புஞ்சிஹேவா என்பவருக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(iii) இன்றேல், மேற்படி நபர் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2027/ '11

6.

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (2)

(அ) (i) தற்போது முறைசாரா மற்றும் தவறான வழிகளில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் வீட்டுப் பணிகள் , சிறு பிள்ளைகளைப் பேணல், மற்றும் வீட்டுத் தோட்டப் பராமரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதையும்;

(ii) இவ்வாறு பணியில் ஈடுபடும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பெரும்பாலும் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு சிறுவர்கள், மற்றும் பெண்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாவதை ஒழிக்கும் பொருட்டும், ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குனர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மையாக அமையும் பொருட்டும், மேற்கூறிய தொழில்களை எதிர்பார்ப்பவர்களை பதிவு செய்யக்கூடியவாறான முறைசார்ந்த முறையியலொன்றுடன் கூடிய நிறுவனமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) தாபிக்கப்படும் அவ்வாறான நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்டவர் களுக்கு மாத்திரம் மேலே (அ) i இல் குறிப்பிட்டவாறான தொழில்களை முறைசார்ந்த விதத்தில் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2033/ '11

7.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரன்டம்பேயில் அமைந்துள்ள இளவல் படையணி பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) தற்போது அந்த முகாமில் வசதிகள் வழங்கப்பட்டுள்ள இளவல் படையணிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) அந்த முகாமில் ஒரே தடைவையில் தங்கியிருந்து பயிற்சி பெறக்கூடிய இளவல் படையணி மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) அந்த எண்ணிக்கையைத் தாண்டிய மாணவர் எண்ணிக்கையை பங்குகொள்ளச் செய்து பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதா;

(v) இளவல் படையணிப் பயிற்சியைப் பெறக்கூடிய மாணவர்களின் ஆகக் குறைந்த வயதெல்லை யாது;

(vi) மேற்படி வயதுக்குக் குறைந்த மாணவர்கள் அந்த முகாம்களில் பயிற்சி பெற்றுள்ளார்களா;

(vii) அவ்வாறெனின் அந்த மாணவர்களை பங்குகொள்ளச் செய்த முகாம்களுக்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1656/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள எந்துராகல தோட்டத்துக்கு உரித்தான கொட்டகல பெருந்தோட்டக் கம்பனியின் தேயிலை மற்றும் இறப்பர் தொழில்சாலை சுற்றயலில் உள்ள கட்டடங்கள் பல வருட காலமாக பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலையை மீண்டும் திறந்து பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அதனை வேறு பயனுள்ள நடவடிக்கைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், எவ்வகையான நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1747/ '11

9\. கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் கஸினோவை சாதாரண வியாபார நடைமுறையாக ஏற்றுக்கொள்கிறதா என்பதையும்;

(ii) இன்றேல், கஸினோ சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சட்டமாக்கப்பட்டு வரிவிதிக்கப்பட்டது ஏன் என்பதையும்;

(iii) கஸினோ மூலம் நாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1999/ '11

10\. கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவில் சேவையாற்றுகின்ற நிமல் புஞ்சிஹேவா என்பவர் மாதாந்தம் பெறும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவர் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனமொன்றை பயன்படுத்துகின்றா என்பதையும்;

(iii) மேற்படி நபர் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவில் சேவையாற்றுவதற்கு மேலதிகமாக வேறொரு அரச தொழிலிலும் ஈடுபட்டுள்ளாரென்பது காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு வெளிப்படுத்தியுள்ளாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேவையாற்றுதல் சார்பில் ரூபா எண்பதாயிரம் (ரூ.80,000/-) சம்பளத்தை பெறுகின்றாரென்பதையும்;

(ii) மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வாகனம் ஒன்றையும் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்துகின்றாரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2035/ '11

11\. கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் பிரதிநிதிகள் அல்லாத நபர்களின் பாதுகாப்புக்காக அரச பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா;

(ii) அவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் ஏனைய தகவல்கள் யாவை,

(iii) இவர்களின் பாதுகாப்புக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களா, அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களா, அல்லது இராணுவ உத்தியோகத்தர்களா;

(iv) மேற்கூறியவாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்டுள்ள பின்தொடர் பாதுகாப்பு வாகனங்களின் ( Backup vehicles) எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எவரேனும் ஒருவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை தீர்மானிக்கின்ற அதிகாரம்வாய்ந்தவர் யார்;

(ii) அத்தகய பாதுகாப்பு வழங்கப்படும் முறையியல் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2269/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மீண்டுவரும் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி மீண்டுவரும் செலவினங்களுக்கு ஒப்பீட்டளவில் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவுக்கு அதிக நிதியை ஒதுக்குவது உகந்ததென்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1657/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 2005-2006 கல்வி ஆண்டு முதல் 2010-2011 கல்வி ஆண்டு வரை அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) 2009-2010 மற்றும் 2010-2011 கல்வி ஆண்டுகளில் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2009-2010 ஆம் கல்வி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010-2011 கல்வி ஆண்டில் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் ஏதேனும் குறைவு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1748/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 இலிருந்து 2011 வரை இலங்கை அரசாங்கம் ஈடுபட்ட சீனக் கருத்திட்டங்களின் எண்ணிக்கையினையும்;

(ii) அக் கருத்திட்டங்களின் பெயர்களையும்;

(iii) ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் முழுப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் சீன உதவியின் பாகத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு கருத்திட்டத்திலும் வேலைக்கமர்த்துமாறு சீனக் கம்பனியினால் தேவைப்படுத்தப்பட்ட சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(ii) சீனத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சீனக் கம்பனிகளின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்குவதற்கான நியாயப்படுத்தல்களையும் வலுவான காரணத்தினையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2036/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) இலங்கை கிரிகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அந்த நிறுவனத்தினால் வருடாந்தம் செலவு செய்யப்பட்டுள்ள தொகை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவு செய்துள்ள தொகை;

(iii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் இருந்த நாட்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகத்தர்கள் மேற்கூறியவாறு வெளிநாடு சென்றதனால் கிரிகெட் விளையாட்டுத்துறைக்குக் கிடைத்த சாதகமான அல்லது பாதகமான பெறுபேறுகள் யாவை;

(ii) வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் பயணச் செலவுகள் தங்குமிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் சுற்றுலா விபரக் குறிப்புக்களை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 யூன் 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0449/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வர்த்தக வங்கிகள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை பற்றியும்;

(ii) தனியார் வங்கிகளில் அரசாங்கம் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றதா என்பது பற்றியும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஊ.ந.பொ.நி) அல்லது வேறு ஏதேனும் அரச நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தனியார் வங்கிகளின் பங்குக் கொள்வனவின் மொத்த அளவையும்;

(ii) ஒவ்வொரு வங்கியிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் சதவீதத்தையும், செலுத்தப்பட்ட மொத்த கிரயத்தை, அத்தகைய கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(iii) பங்கு விலைகள் வீழ்ச்சியடைந்தால், பங்குக் கொள்வனவில் ஏற்படும் இடர்களை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1115/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கல்வியில் தர ரீதியான ஒரு அபிவிருத்தியை உருவாக்குவதற்காக ஆசிரிய ஆலோசகர்கள் அளப்பரிய சேவை ஆற்றுகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆசிரிய ஆலோசகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுக்குரிய சலுகைகளும் கொடுப்பனவுகளும் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) சேவையில் திருப்திகரத்தன்மையை ஏற்படுத்தி ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து மேலும் பயனுள்ள சேவையினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆசிரிய ஆலோசகர் சேவையொன்றை தோற்றுவிப்பதற்கும்;

(ii) அதன் மூலம் இவர்களின் சேவையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1562/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச சேவைக்கு போட்டிப் பரீட்சைகளின்றி ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு ஆட்சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களை ஆட்சேர்க்கும்போது கவனத்திற்கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளில் தோற்றி ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ள ஆயிரக்கணக்கானோர் தற்போதுகூட தொழில் வாய்ப்புகளின்றி உள்ளபோது போட்டிப்பரீட்சைகள் நடத்தப்படாது மேலே குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகளின் காரணமாக பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களுக்கு பெரும் அநீதி நேரிடுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளவர்களுக்கு தொழில் வழங்குவதற்கான நீதியானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1859/ '11

4.

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வவுனியா நகர சபைக்குச் சொந்தமான மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பூந்தோட்டம், குருமன்காடு மற்றும் வவுனியா சந்தைக்கு அருகிலிருக்கும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் குருமன்காடு மற்றும் வவுனியா சந்தைக்கு அருகிலிருக்கும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் குத்தகைக்கு வழங்கும்போது கேள்விப்பத்திரங்கள் கோரல் அல்லது பகிரங்க ஏலவிற்பனை நடத்தப்பட்டதா என்பதையும்;

(ii) 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மேற்படி ஒவ்வொரு விற்பனை நிலையமும் குத்தகைக்கு வழங்கப்பட்ட தொகை மற்றும் குத்தகை பெற்ற தரப்பினர் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011.06.29ஆம் திகதி நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தின் அறிக்கைபடி வவுனியா சந்தைக்கு அருகில் அமைந்துள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையம் திரு. எஸ். கே. காதர் என்பவருக்கு ரூபா 859,711.05 வுக்கும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையம் திரு. கே. கே. மஸ்தான் என்பவருக்கு ரூபா79,315.50 வுக்கும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படாமல் குறைந்த தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் மூலம் சபைக்கு மேற்படி மூன்று வருடங்கள் தொடர்பிலும் சுமார் ரூபா ஒரு கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், அதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களிடமிருந்து குறித்த பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1978/ '11

5.

கௌரவ ஆர்.எம். ரஞ்ஜித் மத்துமபண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின், புத்தள பிரதேச செயலாளர் பிரிவில், கல்டம்மண்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் டீ. எம். பியதாஸ, டீ.எம். குணதாஸ, ஆர்.எம். அமரதாஸ, ரீ.ஏ. சரத், எம்.பீ.குணபால, டீ.எம். ரத்னசிறி, டீ.எம். சரத், ஜே.எம். பிரேமலதா மற்றும் எச்.எம் குணசேகர ஆகியோர் சமுர்த்தி நிவாரணம் பெற்ற குறைந்த வருமானம் பெறுவோர்கள் என்பதையும்;

(ii) தற்போது இவர்களின் சமுர்த்தி நிவாரணம் நீக்கப்பட்டுள்ளதென்பதையும்:

அவர் அறிவாரா?

(ஆ) சமுர்த்தி நிவாரணத்தை இழந்துள்ளமையினால் மிகவும் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இவர்களுக்கு மீண்டும் சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1989/ '11

6.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சாவகச்சேரி நகரசபை பிரதேசத்தில் அமைந்துள்ள 12 பாடசாலைக்குச் சொந்தமான மலசல கூடங்களின் கழிவுகளை அகற்றுவதற்கு சாவகச்சேரி நகரசபை தவறியுள்ளதென்பதையும்;

(ii) இந்நிலைமை தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் நிர்வாகத்தினர் நகரசபைக்கு அறிவித்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரச்சினைக்குரிய நிலைமையை தீர்ப்பதற்காக சாவகச்சேரி நகரசபைக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி அப்பாடசாலைகளுக்கு நகரசபையினால் வழங்கக் கூடிய அனைத்து வளங்களையும் உரிய முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2025/ '11

7\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆரம்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்புப் பட்டத்திற்கு கற்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களல்லாத மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) ஆரம்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டத்திற்கு கற்பதற்காக அனுமதிக்கப்பட்ட மேற்படி மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பல்கலைக்கழகம் மற்றும் பட்டப் பாடநெறிக்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆரம்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டத்திற்கு கற்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களல்லாத மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற இலங்கையர்களல்லாத மாணவர்களுக்கு "தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்திப்" பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் மேற்படி மாணவர்களுக்கும் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2057/ '11

8\.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் சகல கொள்வனவுகள் மற்றும் விற்பனையினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் பொறுப்பான தரகர்களின் பெயர்களையும்;

(iii) தரகுக் கட்டணங்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கான செலவினையும்;

(iv) மேற்குறிப்பிட்ட 2 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு பங்குத் தரகர் கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தரகுக் கட்டணத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் தரப்பட்ட ஒவ்வொரு பங்குகளின் கொள்வனவு அல்லது விற்பனைக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய மற்றும் கொள்வனவு அல்லது விற்பனையிலிருந்து இரண்டு வாரங்களில் சந்தை நிறைவு பெறும் போதிருந்த விலையை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2087/ '11

9.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) 2005 – 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இச்செயற்பாடுகளுக்கென போதியளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) மேற்படி காலப் பகுதியில் இதற்கென செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் வருடாந்த ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2102/ '11

10.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள பதிற் கடமை புரியும் பாடசாலை அதிபர்கள் நிரந்தர சேவையில் அமர்த்தப்படுவது சம்பந்தமாக, இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) பதிற் கடமை புரியும் பாடசாலை அதிபர்களாக இவர்கள் கடமையாற்றியுள்ள கால எல்லைக்காக இவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலுவைச் சம்பளம் செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) பதிற் கடமை புரியும் அதிபர்களுக்கு மத்தியில் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2112/ '11

11.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியில், ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவியையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தரின் கல்வித் தகைமைகளையும்;

(iii) மத்திய வங்கியில் அந்த உத்தியோகத்தரின் சேவைக் காலத்தையும்;

(iv) மத்திய வங்கியின் முதலீட்டுக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினர்களதும் பெயர், பதவி, மற்றும் கல்வித் தகைமைகளையும்;

(v) மத்திய வங்கியில் மேற்படி (iv) இல் சொல்லப்பட்ட ஒவ்வொரு உத்தியோகத்தர்களதும், சேவைக்காலம் ஆகியவற்றையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

1551/ '11

12\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு— (1)

(அ) (i) இந்திய உதவியுடன் 2010ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கைப் புகையிரதப்பாதைகள் நவீனப்படுத்தல் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட திகதி ஆகியவற்றையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வேளையில் இறுதியான செலவினம் ஆகியவற்றையும்;

(iii) ஊழியத்துக்காக ஏற்பட்ட செலவினத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்த கம்பனி அல்லது நாடு மேற்படி வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கிய பதவிநிலைகளையும்;

(iii) இலங்கைப் புகையிரதப்பாதை நவீனப்படுத்தல் கருத்திட்டத்தின் பணியாளர்கள் சார்பாக செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1590/ '11

13\.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின் புத்தளவில் இடம்பெற்ற தயட்ட கிருல கண்காட்சியோடு இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கும்புக்கன, ஒக்கம்பிட்டிய, புத்தள மற்றும் செல்லக்கதிர்காமம் ஆகிய வீதிகள் காபட் இட்டு செப்பனிடப்பட்டது என்பதையும்;

(ii) குறித்த வீதிகளில் சில தற்போது அமிழ்ந்துபோயுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வீதியையும் அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(ii) அந்த நிதியை வழங்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதி அபிவிருத்திப் பணிகள் வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர்/ ஒப்பந்தக்காரர்கள் யாவரென்பதையும்;

(ii) குறித்த பணிகளை மேற்பார்வை செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதியில் சேதமடைந்துள்ள இடங்களை சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களைக் கொண்டு மீண்டும் புனரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1867/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2011.06.31 ஆம் திகதியளவில் பெற்றுக்கொண்டுள்ள நீண்ட கால மற்றும் குறுங்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஒவ்வொரு கடன் வகைகளின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகைகள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இக்கடன் தொகைகளைப் பெற்றுக்கொள்வதற்கான காரணங்கள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iv) ஒவ்வொரு கடனும் பெறப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(v) பெறப்பட்டுள்ள மேற்படி கடன்களில் இதுவரை செலுத்தப்பட்டுள்ள தொகைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்குஅறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2088/ '11

15.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டில் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மத வழிபாட்டுத் தலங்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) 2005 – 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இச்செயற்பாடுகளுக்கென போதியளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) மேற்படி காலப் பகுதியில் இதற்கென செலவிடப்பட்ட பணத் தொகைகள் வருடாந்த ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 யூன் 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0686/ '10

1.

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 செப்டம்பர் 01ஆம் திகதியன்றுள்ளவாறு, இலங்கை அரசாங்கத்தின் தங்க ஒதுக்கத்தில் மத்திய வங்கியினால் ஏலமிடப்பட்ட தொகை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஏலத்தில் விடப்பட்ட தங்கத்தின் பெறுமதியை ஐ.அ.டொலர்களிலும் இலங்கை நாணயத்திலும் யாதென்பதையும்,

(iii) அரசாங்கத்தினால் தங்கம் என்ன விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்,

(iv) பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் ஏதேனும் இலங்கை மத்திய வங்கி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தங்கம் ஏதாவது விற்பனை செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், தங்கத்தின் விற்பனை விலை எவ்வளவு என்பதையும்,

(iii) இத்தங்க விற்பனை விலைமனுக்கோரல் மூலமா அல்லது ஏலவிற்பனை மூலமா மேற்கொள்ளப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1116/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருக்கையில், அதிபர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்ததன் பின்னர், அதிபர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அதிபர்கள், முன்னைய சேவையை விடக் குறைந்த சம்பளத்தைப் பெறுகிறார்கள் என்பதையும்;

(ii) மேற்படி காரணத்தினால் அவர்கள் மிகுந்த உள ரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மிகுந்த அர்ப்பணிப்புடன் பாடசாலை முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இக்குழுவினரை இதற்கு முன்னர் ஆசிரிய சேவையில் பெற்ற சம்பள மட்டத்தை விட உயர்வான சம்பள மட்டத்தில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(ii) தற்போது அதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா?

(iii) அவ்வாறின்றேல், அத்தகைய முறைமையொன்று உருவாக்கப்படும் கால எல்லை யாது?

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1563/ '11

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இற்றை வரை களணிதிஸ்ஸ இரட்டை மின் வலுநிலையத்தின் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) நட்டம் ஏற்பட்டிருப்பின்,

(i) அதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டத்தை தாங்கிக்கொள்பவர்கள் யாரென்பதையும்;

(iii) இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யாரென்பதையும்,

(iv) மேற்படி நட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள நேரிட்டிருப்பின் அதற்கான நிவாரணம் மக்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1861/ '11

4\.

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) டெங்கு ஒழிப்பின் பொருட்டு வட மாகாண ஆளுநரினால் வவுனியா நகர சபைக்கு 2009 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அப்பணத் தொகை செலவிடப்பட்டமை தொடர்பான கணக்கு அறிக்கைகள் மற்றும் விபரங்கள் இதுவரை நகரசபைக்கு சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கணக்கு அறிக்கைகள் மற்றும் விபரங்களை நகரசபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2001/ '11

5\.

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்துமபண்டார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தள நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பிரதேச சபைக் கட்டடிடத்தில் அமைந்துள்ள 17 விற்பனைக் கூடங்களில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனைக் கூடத்திற்காக ஒதுக்கப்பட்ட 11 ஆம் இலக்க விற்பனைக் கூடத்தைத் தவிர, இலக்கம் 4 தொடக்கம் இலக்கம் 17 வரையுள்ள விற்பனைக் கூடங்கள் அனைத்தும் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு விற்பனைக் கூடமொன்று ரூபா 20 இலட்சம் வீதம் வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) 1,2,3 ஆம் இலக்க விற்பனைக் கூடங்கள் சபையின் எதிர்கால தேவைக்காகப் பயன்படுத்தும் பொருட்டு கேள்விப் பத்திரம் மூலம் வழங்காமலிருப்பதற்கு சபையின் மாதாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதென்பதையும்;

(iii) பின்னர் மேற்படி மூன்று விற்பனைக் கூடங்களுக்காக தமது நண்பர்கள் சமர்ப்பித்த ஒரு விற்பனைக் கூடத்திற்கு ரூபா 10 இலட்சம் போன்றதொரு ஆகக்குறைந்த பெறுமதியைக் கொண்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவென்பதையும்;

(iv) வெளிப்படைத்தன்மையின்றி மேற்கொள்ளப்பட்ட மேற்படி கேள்விப் பத்திரம் கோரலால் மேற்படி பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் இழக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) மேற்படி மோசடியான கேள்விப் பத்திரம் கோரலின் ஊடாக பெருமளவு நிதி மோசடி இடம்பெற்றுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கேள்விப் பத்திரம் கோரல் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2089/ '11

6.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் இந்து மத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் மேற்கோள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி பணிகளுக்காக 2005 - 2010 ஆண்டுகளுக்கிடையிலான காலத்தினுள் செலவிடப்பட்ட பணத் தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) மேற்படி ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் போதுமானவையா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2103/ '11

7.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை விண்ணப்பதாரர்களில்

(i) அந்தப் பரீட்சையில் 8 பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களுக்கு ஏற்ப சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடையாத மணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

வருடாந்த ரீதியாக மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அரச பாடசாலைகளில் கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்காக உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சிங்கள மொழியைத் தவிர ஆங்கில மொழி மூலத்தையும் பயன்படுத்தும் தேசிய மற்றும் மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்க இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0691/ '10

8.

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மத்திய வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரையில் இலங்கையில் வர்த்தக வங்கிகளை நிறுவுவதற்கு விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு பிரதான வங்கியின் கீழும் இயங்கும் கிளைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வங்கிகளின் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தையும்,

(iv) இன்றுள்ளவாறாக வர்த்தக வங்கிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட வங்கிகளுள், இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள எவையேனும் வெளிநாட்டு வங்கியொன்றினை வாங்குவதற்கு பணத்தினை வைப்புச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவ் வங்கியின் பெயரையும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பணத்தின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வர்த்தக வங்கியல்லாத வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) இலங்கையில் தற்போது இயங்கும் வர்த்தக வங்கியல்லாத வங்கிகளின் எண்ணிக்கையினையும்,

(iii) அவ்வங்கிகளின் பங்கு மூலதனத்தினையும்,

(iv) வர்த்தக வங்கி அல்லது வர்த்தக வங்கி அல்லாத வங்கி ஏதாவது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அவ்வங்கிகளின் பெயர்களையும் அவற்றின் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1634/ '11

9.

கௌரவ புத்திக பத்திரண,— கமநல சேவைகள் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் கித்தலகம மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய பதுளு வயல்வெளியின் கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகள் உரிய முறையில் புனரமைக்கப்படாமையினால் சுமார் 150 ஏக்கர் வயற்காணிகள் தரிசு நிலங்களாக மாறியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வயல்வெளிக்குச் சொந்தமான நீர்ப்பாசன முறைமையை துரிதமாக புனரமைப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1659/ '11

10\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டளவில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் நிரந்தர, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், பதவிகள், உரிய சம்பளங்கள் மற்றும் வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள் யாவை என்பதையும்

அவர் தனித்தனியே குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களில் 2011 ஆம் ஆண்டில் மிகை ஊதியம் செலுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்களும், பதவிகளும் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு ஊழியருக்குமான மிகை ஊதியத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இதற்காக ஏற்கப்பட்ட மொத்த செலவு எவ்வளவு என்பதையும்;

(v) இதற்கான நிதி பெறப்பட்ட வழி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2090/ '11

11\.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் இஸ்லாம் மத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் மேற்கோள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி பணிகளுக்காக 2005 – 2010 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தினுள் செலவிடப்பட்ட பணத்தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் போதுமானவையா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2105/ '11

12\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் பாடசாலை கல்வி முறையில் பிள்ளைகள் பலதரப்பட்ட தரங்களில் பாடசாலைகளை விட்டுச் செல்கின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாரசாரம் எவ்வளவு என்பதையும்;

(ii) பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு என்பதையும்;

(iii) தரம் 5 இல் பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்;

(iv) கல்வி பொதுத் தராதரப் பரீட்சையின் பின்னர் பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) சிங்கள மொழி மூல, தமிழ் மொழி மூல மாணவர்களுக்கிடையில் பாடசாலை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் பிள்ளைகள் பாடசாலைகளை விட்டுச் செல்வதற்கான காரணங்கள் என்ன என்பதையும்;

(ii) இலங்கையில் பிள்ளைகள் பாடசாலை வருவதை ஊக்குவிப்பதற்காக தற்போது நடைமுறையில் இருக்கும் வேலைத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், என்?

1552/ '11

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின் வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை அனல் மின் நிலைய கருத்திட்ட நிர்மாணப்பணிகள் முடிவுற்ற போது உள்ளவாறு ஊழியர் செலவை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு அவர்களை வரவழைத்த நாட்டினால் அல்லது கம்பனியினால் வழங்கப்பட்ட பதவிப் பெயர்களையும்;

(iii) நுரைச்சோலை அனல் மின் நிலைய நிர்மாணக் கருத்திட்டப் பணியாட்கள் சார்பில் வழங்கிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1870/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் இணையத்தளத்தின் ஊடான தொலைபேசி அழைப்புப் பிரிவின் (VOIP) ஒரு நாள் வருமானம் மற்றும் மாதாந்த வருமானம் எவ்வளவு;

(ii) இப்பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மூடப்பட்ட திகதி யாது;

(iv) இப்பிரிவை மூடுவதற்கான காரணங்கள் யாவை;

(v) மூடும் சந்தர்ப்பத்தில் இப்பிரிவு பெற்ற இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2091/ '11

15.

கௌரவ சஜித் பிரேமதாச,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஸ்ரீ லங்கன் விமான சேவை வெற்றிகரமாக செயற்படுகின்றதா;

(ii) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இவ்விமான சேவை வெற்றிகரமான செயற்பாட்டைக் காட்டியுள்ளதா;

(iii) மேற்படி காலப்பகுதியில் ஸ்ரீ லங்கன் விமான சேவை பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 யூன் 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0768/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்களது எண்ணிக்கையை நாடுகள் மற்றும் வருடவாரியாக வெவ்வேறாகவும்;

(ii) அவர்கள் எந்தெந்த கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்கள் மூலம் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற அந்நியச் செலாவணியை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு மேலும் அதிகளவு மாணவர்களை ஈர்க்க மாற்று நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதன் காரணமாக வாய்பை இழக்கும் உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(ii) இப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1120/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தர்மாச்சார்ய பரீட்சையில் சித்தியடைந்து தற்போது தஹம் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்க ஆசிரியர் நியமனம் வழங்குதல் தொடர்பாக இரண்டு அமைச்சரவை நிருபங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களுக்கு 2600 ஆவது சம்புத்த ஜயந்தி ஆண்டுக்குள் அரசாங்க ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது?

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1664/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2011 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் லங்கா சதொச நிறுவனத்தினால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோழி இறைச்சியின் நிறை எவ்வளவு;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ இறைச்சிக்கு இந்தியாவுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) இக்கோழி இறைச்சி களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்கள் யாவை;

(iv) களஞ்சியப்படுத்திய இடங்களிலிருந்து நுகர்வுக்காக கோழி இறைச்சி விநியோகிக்கப்பட்ட திகதி, தொகை மற்றும் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் ஒவ்வொரு களஞ்சியத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை;

(v) 2011 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் குறிப்பிட்ட கோழி இறைச்சித் தொகையில் களஞ்சியங்களில் எஞ்சியிருந்த தொகை எவ்வளவு;

(vi) மேற்படி எஞ்சியிருந்த தொகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1862/ '11

4.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான தோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) ஊழியர்களை ஆட்சேர்த்தல், நீக்குதல் மற்றும் சேவை நீடிப்பு வழங்குதல் தொடர்பான முழுமையான அதிகாரம் மேற்படி கம்பனியின் நிர்வாகத்துக்கு உள்ளதா என்பதையும்:

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பெருந்தோட்டக் கம்பனியின் தற்போதைய தலைவர் பெருந்தோட்டத் துறையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட ஒருவராவார் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்விசாரணையின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விசாரணையில் குறித்த தலைவர் குற்றவாளியாகுமிடத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தலைவர் சமர்ப்பிக்கின்ற எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் கணக்கு அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி கம்பனியின் 2007-2010 ஆண்டுகளினுள் இலாபம் ஈட்டிய தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) நட்டம் ஏற்பட்டிருப்பின் அந்த நட்டம் எவ்வளவென்பதையும்;

(iii) ஊழல் மற்றும் முறைகேடுகள் அதற்குக் காரணமாயமைந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) (i) மேற்படி கம்பனியின் பொருட்டு 'கோப்' அறிக்கையொன்றின் சிபார்சுக்கமைய நடவடிக்கை அலுவலகமொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அது நிறுவப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி அலுவலகத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

2092/ '11

5.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது விவசாய ஓய்வூதியத்திட்டம் முழுமையாகவே செயலிழந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் விவசாய ஓய்வூதியத்திட்டத்தை செயற்படுத்த செலவு செய்யப்பட்ட தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) விவசாய ஓய்வூதியத்திட்டத்தை வலுவூட்ட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2107/ '11

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் தமிழ்மொழி மூலம் மாத்திரம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெருந்தோட்டங்களைச் சாராத பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கிணங்க வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கிடையில் இருக்கும் தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள், நவோத்யா பாடசாலைகள் மற்றும் இசுரு பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் திட்டத்தில் அடங்கும் பெருந்தோட்டத்தைச் சாராத தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இயங்கும் அரச தமிழ் பாடசாலைகளில் பாடசாலைகளை விட்டு விலகிச் செல்லும் மாணவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த 5 வருடங்களினுள் மூடப்பட்ட அரச தமிழ்ப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

1553/ '11

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத விவகாரங்களுக்கான அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப புனர்நிர்மாணம் மற்றும் திருத்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்ட திகதியையும்;

(iii) உத்தேச மொத்த செலவினத்தையும் கருத்திட்டம் நிறைவடைந்த வேளை ஏற்பட்டிருந்த உண்மையான செலவினத்தையும்;

(iv) இக் கருத்திட்டத்திற்கான ஊழியச் செலவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப புனர்நிர்மாணம் மற்றும் திருத்தக் கருத்திட்டத்தில் பணியாற்றிய வெளிநாட்டுப் பணியாட்கள் மற்றும் உள்நாட்டுப் பணியாட்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு அவர்களை வரவழைத்த நாட்டினால் அல்லது கம்பனியினால் வழங்கப்பட்ட பதவிப் பெயர்களையும்;

(iii) மேற்படி கருத்திட்டப் பணியாட்கள் சார்பில் வழங்கிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1635/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— கமநல சேவைகள், வன சீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தின் திபொல்கெட்டிய கமநல சேவைகள் நிலையத்தினால் நிருவகிக்கப்படுகின்ற 'பனஹடுவ' குளத்தின் நீர் வெளியேறும் மடை நிலத்தில் அமிழ்ந்துள்ளமையால் சுமார் அறுபது ஏக்கர் நெற்காணி அழிவுறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதால் பிரதேசத்தின் விவசாயிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி குளத்தின் நீர் வெளியேறும் மடையை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1871/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண ரெலிகொம் கட்டிடத்தை புனரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(ii) இக் கட்டிடத்தை புனரமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) கேள்விப் பத்திரங்களின் பிரகாரம் ஆகக்குறைந்த விலை மனுக்களின் கீழ் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நபரின் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட பணத் தொகை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது இக்கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளதா;

(ii) அவ்வாறாயின் இதற்கு செலவாகிய முழுச் செலவினம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2093/ '11

10.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய காட்டு யானைகளின் தொகை யாது;

(ii) காட்டு யானைகளைப் பேணிப்பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி நடவடிக்கைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் யாவை;

(iv) காட்டு யானைகளைப் பேணிப்பாதுகாப்பதற்காக 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2113/ '11

11.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலுள்ள வீதிச் சிறார்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் பிரகாரம்,

(i) அனைத்து சிறுவர்களினதும் பாதுகாப்பையும் பேணலையும் உறுதிப்படுத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்ததாக பொலிஸ் சிறுவர் பணியகமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது தாபிக்கப்பட்டுள்ள மாவட்டம் யாதென்பதையும்;

(iii) சிறுவர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட நீதி மன்றக் கட்டமைப்பொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் பிரகாரம் ஐந்து வயது வரையான சிறுவர்களுக்கான பால் கொள்வனவு செய்வதற்காக மாதாந்தம் வழங்கப்படும் ரூபா 200/= க்குப் பதிலாக தற்போது ரூபா 60/= கொடுப்பனவொன்று வழங்கப்படுகிறதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், குறித்த கொடுப்பனவை வழங்குவதற்கு ஆரம்பித்த ஆண்டு யாதென்பதையும்;

(iii) இதன் மூலம் பயன்பெறுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் போசணைப் பொதிக்கு மேலதிகமாக சமுர்த்தி பெறும் தாய்மார்கள் குழந்தையொன்றைப் பெற்றெடுக்கும்போது குழந்தைக்குத் தேவையான பொருட்களடங்கிய பரிசுப் பொதியொன்று வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பரிசுப்பொதி கிடைக்கப்பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1554/ '11

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீன கலாசார நிலையம், கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராகப் பதவி வகித்த 2002- 2004 வரையான காலப்பகுதியில் சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த ஒரு நன்கொடையா என்பதையும்;

(ii) அது ஒரு தடங்கல்கள் அற்ற நன்கொடையா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சீன கலாசார நிலைய நிர்மாணத்தின் ஆரம்பத் திகதி மற்றும் முடிவுத் திகதி ஆகியவற்றையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்ட மொத்தச் செலவு மற்றும் அது முடிவுறும் வேளையில் இறுதிச்செலவு ஆகியவற்றையும்;

(iii) ஊழியத்துக்காகச் செலவுசெய்யப்பட்ட செலவினத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக கம்பனி அல்லது நாடு ஒன்றினால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பதவிப்பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சீன கலாசார நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தின் தொழிலாளர்கள் சார்பாகச் செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிக களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1636/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமியால் அழிவடைந்த காலி மகமோதரை மருத்துவமனையை மீளக் கட்டியெழுப்புவதற்காக ரூபா 3000 மில்லியன் வெளிநாட்டு உதவித் தொகையொன்று கிடைத்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ளதென்பதையும்;

(ii) இதுவரை அதன் நிர்மாணப் பணிகள் அத்திவாரத்துக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு அரசினால் வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ரூபா 3000 மில்லியன் தொகையை வழங்கிய நாடு யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தகாரர் மேற்படி தொகையைப் பெற்றுக்கொண்டு மருத்துவமனைக் கட்டடத்தை நிர்மாணிக்காமை தொடர்பாக ஆராயும் பொருட்டு சுகாதார அமைச்சினால் ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் பெறுபேறு யாதென்பதையும்;

(iv) விசாரணை மேற்கொள்ளப்படவில்லையெனின், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மீண்டும் வெளிநாட்டுக் கடனைப் பெற்று இதன் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக் கடன்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அக்கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனம் மற்றும் நாடு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1902/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்தற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிர்வாணமாக நடமாடக்கூடிய கடற்கரைகளை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) நிர்வாணமாக நடமாடக்கூடிய கடற்கரைகள் ஏற்படுத்தப்படுமாயின் அதற்கென ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கடற்கரைகள் யாவை;

(iii) நிர்வாணமாக நடமாடக்கூடிய கடற்கரைகளை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி கடற்கரைகளை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நலன்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2094/ '11

15.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நடவடிக்கை தொடர்பாகவும் செலவிடப்பட்ட பணத் தொகை தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகள் எத்தகைய முறையில் பெறப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன் ?

# 2012 யூன் 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0771/ '10

1\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 6 வருடங்களில், அரசாங்கம் அதன் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கும் முகமாக கடன் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) முதலும் வட்டியுமாக 2011, 2012, 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளுக்கான எதிர்வு கூறப்பட்ட மொத்தப் படுகடன் மீள்கொடுப்பனவையும்;

(iii) முதலும் வட்டிச் செலவினமாக 2003, 2004, 2005 ஆகிய ஆண்டுகளுக்கான மொத்தப்படுகடன் மீள்கொடுப்பனவையும்;

(iv) 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் எஞ்சிய கொடுப்பனவு பற்றாக்குறையையும்;

(v) 2011, 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் எஞ்சிய கொடுப்பனவு பற்றாக்குறையை அல்லது தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1157/ '11

2\.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீதிமன்ற தீர்ப்பொன்றின் அடிப்படையில் லங்கா மெரயின் சேர்விஸ் நிறுவனத்தின் பங்குகள் அரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் தற்பொழுது என்ன பெயரில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்துக்குச் சொந்தமான பங்குகள் தற்பொழுது வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்:

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்குவதற்காக நிருமாணிக்கப்பட்டு வரும் எண்ணெய்த் தாங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணெய்த் தாங்கிகளை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ குத்தகைக்கு வழங்கும் திட்டமேதும் உண்டா என்பதையும்;

(iii) ஆமெனில், குத்தகைக்கு வழங்க எதிர்பார்த்துள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1666/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி,திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் வசமுள்ள தற்போதைய தங்க ஒதுக்கம் எவ்வளவென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வசமிருந்த தங்க ஒதுக்கத்தின் அளவு வருடாந்த ரீதியில் தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டில் இருந்த தங்க ஒதுக்கத்தில் ஒரு பகுதி விற்கப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், விற்கப்பட்டுள்ள தங்கத்தின் அளவு யாதென்பதையும்;

(v) அவ்வாறு தங்கத்தை விற்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி தங்கத்தை கொள்வனவு செய்த நாடு அல்லது நபர்கள் யாரென்பதையும்;

(vii) தங்கத்தை விற்று பெற்ற பணத் தொகை யாதென்பதையும்;

(viii) மேற்படி பணம் எத்தகைய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2024/ '11

4.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவின் வீதிகளுக்கு காப்பட் இடுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகையைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள வீதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வீதியிலும் காப்பட் இடப்பட்டுள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காப்பட் இடுவதற்காக பயன்படுத்தப்பட்ட காப்பட் கலவை எத்தனை கியுப்களாகும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளில் காப்பட் இடுவதை மேற்கொண்ட ஒப்பந்த கம்பனி அல்லது கம்பனிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கம்பனிக்கும் மேற்படி ஒப்பந்தங்களை கையளிப்பது தொடர்பாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தகைய உடன்படிக்கைகளை சபாபீடத்தில் இடுவாரா என்பதையும்;

(iv) உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவில்லையாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி ஒப்பந்தங்களை கையளிக்கும் போது முறையான கேள்விப் பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;

(ii) இன்றேல், ஒப்பந்தங்களை கையளிப்பதற்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களின்போது இடம்பெறத்தக்கதான முறைகேடுகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2095/ '11

5.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் 30 வருட காலமாக நடைபெற்ற யுத்தத்தை முடிவுறுத்துவதற்கு முப்படையினருக்கு இணையாக இலங்கை பொலிஸாரும் பெரும் பணியாற்றியுள்ளனரென்பதையும்;

(ii) இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது சம்பளத்துக்கும் முப்படையினரின் சம்பளத்துக்கும் இடையில் வேற்றுமை உள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களுடைய சம்பளத்தை முப்படையில் சமமான பதவிகளை வகிக்கின்ற உத்தியோகத்தர்களின் சம்பளத்துக்கு இணையாக அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2110/ '11

6.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள வர்த்தக வங்கிகளில் ஊழியர் சேமலாப நிதியம் வைப்பிலிட்டுள்ள பங்குகளின் பெறுமதியை வங்கி வாரியாகவும்;

(ii) பங்குகளின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த திகதிகளை கம்பனி வாரியாகவும்;

(iii) அத்தகைய பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதை கம்பனி வாரியாகவும்;

(iv) பங்கின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த பெறுமதியையும்;

(v) இத்தகைய ஏதாவது பங்குகள் பின்னர் விற்கப்பட்டிருப்பின், அவைகள் விற்கப்பட்ட விலையையும் அவை யாருக்கு விற்கப்பட்டன என்பதையும்;

(vi) பங்குகள் வைப்புச் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வங்கியினதும் பணிப்பாளர்கள் சபைகளுக்கு அரசாங்கத்தின் மற்றும் / அல்லது ஊழியர் சேமலாப நிதியத்தின் பெயர் நியமனம் செய்யப்பட்டவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் கல்வித்தகைமைகளையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1602/ '11

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வெளிநாட்டவர்கள் காணிகள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கு 100% வரி விதிப்பதற்கான சட்டம் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) அத்தகைய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கத்தையும்;

(iii) மேற்படி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் இற்றை வரை அதன் ஏற்பாடுகளின் கீழ் வரி செலுத்திய வெளிநாட்டு கம்பனிகளின்/ஆட்களின் எண்ணிக்கையையும்;

(iv) அவர்களால் இற்றை வரை செலுத்தப்பட்ட தொகைகளை வருடவாரியாகவும்;

(v) மேற்படி வரி செலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட வெளிநாட்டு கம்பனிகளின்/ நபர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் பெயர்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1637/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பிரதேசத்தில் மதுராவல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவிலுள்ள நிவுசெட்டல் தோட்ட மருத்துவமனையின் கட்டடங்கள் சிதைவடைந்துள்ளன என்பதையும்;

(ii) மருத்துவமனையை புனரமைப்பதற்காக உத்தியோகத்தர்களால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இம்மருத்துவமனையில் அத்தியாவசிய மருந்து வகைகள்கூட இல்லாதுள்ளமையால் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலைமையை போக்குவதற்காக மருத்துவமனையை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1903/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் (CSN) உரிமை அரசுக்கு அல்லது அரசு சார்பான நிறுவனமொன்றுக்கு உரித்தானதா;

(ii) இந்நிறுவனம் தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமானதாக இருப்பின் இந்நிறுவனத்தின் உரிமையாளரது அல்லது உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) இந் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் ஒலிபரப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி அல்லது ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(ii) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அலை அதிர்வெண் வீச்சிடை ( frequency range) யாது;

(iii) கால்டன் விளையாட்டு அலைவரிசைக்கான ஒலிபரப்பு உரிமை வழங்கப்பட்டுள்ள காலகட்டம் யாது;

(iv) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரசுர மற்றும் ஒலிபரப்பு உரிமையை வழங்குவதுடன் தொடர்புடைய உடன்படிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக செலுத்தப்பட்ட பணத் தொகை யாது;

(ii) மேற்படி கொடுப்பனவுடன் தொடர்புடைய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2096/ '11

10.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் படி இலங்கையில் கால்நடை வளர்ப்பு அபிவிருத்திற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மந்தை வளர்ப்பை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள புல் வெளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி புல் வெளிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்;

(iii) கிராமிய மட்டத்தின் சிறிய அளவிலான விவசாயிகளுக்கு தமது மாடுகளை வளர்ப்பதற்கு புல் வெளிகளை ஒதுக்கித் தருவாரா என்பதையும்;

(iv) கிராமிய மட்டத்தில் சிறிய அளவில் பசுக்களை வளர்க்கின்ற விவசாயிகளின் நன்மைக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2111/ '11

11.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் ஏதாவது முகவர்களுக்கும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சொந்தமான நிதி மற்றும்/ அல்லது நிதி முகாமைத்துவக் கம்பனிகளின் பெயர்களையும் ;

(ii) இந்த ஒவ்வொரு கம்பனிகளினதும் மூலதனத்தையும்;

(iii) இறுதியாகச் சான்றுப்படுத்தப்பட்ட சம்பந்தப்பட்ட ஐந்தொகையின் பிரதிபலிக்கின்றவாறு அக்கம்பனிகள் ஒவ்வொருன்றினதும் மொத்தச் சொத்துக்களையும்;

(iv) மேற்படி கம்பனிகளின் பல்வேறு வகையான பணிப்பாளர் சபைகளில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர், பதவிகள் மற்றும் கல்வித் தகைமைகள் ஆகியவற்றையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

1638/ '11

12.

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேசத்தில், கடுபிலதண்டுவ உயர்வலு மின் விநியோகத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் பல வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தின் கிராமங்களுக்குப் போதியளவு மின்சாரம் கிடைக்காமையால், பிரதேச மக்கள் மிகவும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மின் விநியோகத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1705/ '11

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகம் முழுவதிலுமுள்ள இலங்கைத் தூதரகங்களின் அல்லது உயர் ஸ்தானிகராலயங்களின் தூதுவர்கள்/உயர் ஸ்தானிகர்களின் பெயர்களை நாடுகளின் அடிப்படையிலும்;

(ii) தனது பொறுப்பு நிலையத்திலிருந்து ஒவ்வொரு உயர் ஸ்தானிகராலும் அல்லது தூதுவராலும் கடமை புரியப்படுகின்ற ஏனைய நாடுகள் ஏதாவது இருப்பின் அவற்றினையும்;

(iii) இராஜதந்திரச் சேவையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களின்/ உயர்ஸ்தானிகர்களின் அனுபவத்தினையும்;

(iv) அரசியல் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களின்/ உயர்ஸ்தானிகர்களின் அனுபவம் அல்லது தகைமை ஆகியவற்றினையும்;

(v) இலங்கையின் சார்பில் ஒவ்வொரு தூதரகமும் கடந்த 5 வருடங்களில் ஈட்டிய குறிப்பிடத்தக்க அடைவுகளையும்

யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு தூதரகத்திலும் அல்லது உயர் ஸ்தானிகராலயத்திலும் இலங்கையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) ஒவ்வொரு தூதரகத்திலும் அல்லது உயர் ஸ்தானிகராலயத்திலும் உள்ள மேற்குறிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கான வருடாந்த செலவினை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1904/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் இலங்கை விமானப் படைக்கு உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், கொள்வனவு செய்யப்பட்ட உலங்கு வானூர்திகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வகைக்கு அமைய தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உலங்கு வானூர்தியொன்றை கொள்வனவு செய்வதற்காக செலவாகிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) உலங்கு வானூர்திகள் பெற்றுக்கொள்ளப்பட்ட நாடுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உலங்கு வானூர்திகள் எத்தகைய அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(ii) கடன் அல்லது கடனுதவி அடிப்படையில் பெறப்பட்டவையாயின் அதை மீளச்செலுத்த வேண்டிய கால எல்லை யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல்வாங்களுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2097/ '11

15.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1999 ஆம் ஆண்டில் அரசின் முன்னுரிமையான விடயங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் 2005 ஆம் ஆண்டின் வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுடன் கூடிய திட்டவட்டமான ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) மேற்கூறியவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொத்த பட்டதாரிகளில், முறைசார்ந்த நடைமுறைக்கேற்ப பதவியுயர்வு பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயிருந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அரச சேவைக்கு பிரவேசிக்கின்ற அலுவலக பணியாளர் ஒருவருக்குக் கூட பதவிநிலைத் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று ஓய்வு பெறக்கூடியவாறான செயல் நடைமுறையொன்றைக் கொண்ட அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கும் திட்டவட்டமான நடைமுறையொன்றுடன் கூடிய பதவியுயர்வு வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.8/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற்படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.9/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாக முன்னரும் ஒத்திவைக்க முன்னரும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.10/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.11/ '10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.12/ '10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்றிறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள்ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

18\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

19\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

20\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

21\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

22\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ '10

23\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

24\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

25.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

26.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

27.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

28.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

29.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

30.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

31.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.50/ ’10

32.

கௌரவ அஜித் குமார,— இலங்கையில் மிகப் பெறுமதியான இயற்கை வளங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் மாத்திரமல்லாது உலகிலேயே மிக முக்கியமான இயற்கை வளமாகக் கருதப்படும் சிங்கராஜ காடு, கன்னெலிய பாதுகாப்பு வனம், ரூமஸ்சல கந்த, கொக்கல ஓயா தீவுக் கூட்டல்கள் மற்றும் கண்டல் மரங்கள், மாது கங்கை, ரம்சா ஈரழிப்பு நிலம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.51/ ’10

33.

கௌரவ அஜித் குமார,— காலி கோட்டை மற்றும் அதனை அண்டியுள்ள வரலாற்று ரீதியான மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் உரிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— சுற்றுலா கைத்தொழில் துறையின் மிக முக்கியமான மையமாகவும், வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியில் பெறுமதியைக்கொண்டதும், உலக மரபுரிமையாகக் கருதப்படுகின்றதுமான காலி கோட்டை மதில், காலி கோட்டையின் உள்பகுதியிலும் காலி கோட்டையை அண்டியும் அமைந்துள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியான மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களினதும் மக்களினதும் பங்கேற்புடன் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இந்த வரலாற்று ரீதியான மரபுரிமைகளின் உரிய பயனை நமது நாடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.55/ ’10

34.

கௌரவ திலங்க சுமதிபால,— ஊடக சுதந்திரத்தையும் தகவல் அறியும் உரிமையையும் உறுதிப்படுத்தல்,— அரசியலமைப்பின் தகவல்களை அறிவதற்கும் வெளியிடுவதற்குமுள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், தொழில்நுட்பம் முன்னேறிவரும் உலகில் உண்மையை ஒழிக்கவோ மூடி மறைக்கவோ சந்தர்ப்பம் இல்லாததாலும், சனநாயக நாடொன்றில் அனைத்து பிரசைகளுக்கும் சுதந்திர ஊடகங்கள் மூலம் அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.56/ ’10

35.

கௌரவ திலங்க சுமதிபால,— விளையாட்டின் மூலம் நோயற்ற சமூதாயமொன்றை உருவாக்குதல்,— பிள்ளைப் பருவத்திலேயே பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடவைப்பதன் மூலம் நோயற்ற சமூதாயத்தை உருவாக்குவதற்கும், இயற்கையிலேயே திறமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளை சர்வதேச மட்டத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கும்/உலகப் புகழ்வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி நாட்டிற்கு நற்பெயரை பெற்றுக் கொள்ளும் வகையில் இன பேதமற்ற வகுப்புப் பேதமற்ற நியாயமான செயல் முறையொன்று அரச மட்டத்தில் வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ ’10

36.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

37.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

38.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

39.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

40.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

41.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

42.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 71/ '10

43.

கௌரவ புத்திக பதிரண,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்களுக்கு சமாதான நீதவான் நியமனங்களை வழங்கல்,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் பணத்தையும் சிறப்புரிமைகளையும் எதிர்பார்க்காமல் அவர்களால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்பாகக் கருதி, குறிப்பாக கிராமிய மக்களுக்கு அளப்பெரும் சேவையை ஆற்றிவருவதனால், அச்சேவையை கௌரவிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 72/ '10

44.

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 74/ '10

45.

கௌரவ புத்திக பதிரண,— சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்,— சுனாமி அனர்த்தம் காரணமாக ஏதேனும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து இது வரை அப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமல் இருப்பின், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட செயலாளர் பிரிவு அடிப்படையில் ஆராய்ந்து, அவர்கள் முகம்கொடுத்துள்ள அல்லது தற்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கான வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/ '10

46.

கௌரவ புத்திக பதிரண,— வீட்டிலிருந்து தொழில் புரிவோருக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தல்,— இலங்கையில் பலதரப்பட்ட தொழில் வாய்ப்புத் துறைகளில் பல தரப்பட்ட உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் சுமார் பத்து இலட்சம் பேர்களான வீட்டிலிருந்து தொழில் புரிவோர்களுக்காக அரசியல் அதிகாரம் வாய்ந்தோர்கள், அதனுடன் தொடர்புபட்ட சகல துறைகளினதும் தேர்ச்சிபெற்றவர்கள் புத்தி ஜீவிகள் உட்பட அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று முறையான தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/ '10

47.

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ ‘10

48.

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ ‘10

49.

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ ‘10

50.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ ‘10

51.

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

52.

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

53.

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

54.

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

55.

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

56.

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

57.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

58.

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

59.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

60.

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

61.

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

62.

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

63.

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

64.

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

65.

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

66.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

67.

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

68.

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

69.

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

70.

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

71.

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

72.

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

73.

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 104/ '10

74.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்தல்,— "கற்பகதரு" எனஅழைக்கப்படும் பொதுமக்களுக்கு மிக்க பயனைப் பெற்றுத்தரும் பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்து பனைப் பொருள் அபிவிருத்திக்காய் அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

பா. 105/ '10

75.

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

76.

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

77.

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

78.

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

79.

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

80.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

81.

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

82.

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

83.

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

84.

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/'10

85.

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

86.

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

87.

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

88.

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.122/ '11

89.

கௌரவ ருவன் ரணதுங்க,— அரசாங்க வங்கிகளின் வட்டி செலுத்துதலுக்கும் வட்டி அறவிடலுக்கும் இடையே காணப்படுகின்ற வித்தியாசத்தைக் குறைத்தல்,— அரசாங்க வங்கிகளில் சாதாரண வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் 4 % முதல் 4.5 % வரையிலும் நிலையான வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 8 % ஆகவும், வங்கிகளால் வீடமைப்பு, வர்த்தகம் மற்றும் விவசாயக் கடன்களுக்கு அறவிடப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 12% முதல் 13% வரையிலும் உள்ளதால், மக்களுக்கும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்கும் கைகொடுப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்குமாக, இவ்வாறு அறவிடப்படுகின்ற வட்டிக்கும் செலுத்தப்படுகின்ற வட்டிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.123/ '11

90.

கௌரவ ருவன் ரணதுங்க,— பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு கொடுப்பனவைச் செலுத்துதல்,— அரசாங்க சேவையை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சேவையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது சேவையாற்றி வருகின்ற கிராம அலுவலர்களில் சுமார் 30 % முதல் 40 % வரையிலானோர் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளனராதலாலும், இதற்கென எவ்வித விசேட கவனமும் இதுவரை செலுத்தப்படாதுள்ளதனாலும், பட்டத் தகைமையை கௌரவிக்கு முகமாக பட்டதாரி கிராம அலுவலர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.124/ '11

91.

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞ்சிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்ளின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.126/ ' 11

92.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்காக “சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்” ஒன்றைத் தாபித்தல்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்கான பத்தாண்டு தேசிய மூலோபாயச் சட்டகம் ஒன்றை வகுத்தலானது, தேசிய ஒருங்கிணைப்புக்கும் சமூக ஒற்றுமைக்குமான ஒரு திருப்புமுனை நடவடிக்கையாக அமையுமெனவும் எனவே சிங்கள மொழிபேசும் மக்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் குறுகிய கால வளமளித்தல் நிழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுடன் “சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்” ஒன்றில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பறிமாறிக்கொள்வதற்காக ஒவ்வொரு பாடசாலைகளிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கு கல்வி அமைச்சும் தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.127/'11

93.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.128/11

94.

கௌரவ அஜித் குமார,— முன் பிள்ளைப் பருவக் கல்வி தொடர்பில் தேசிய திட்டமொன்றை உருவாக்குதல்,— எமது நாட்டில், பிள்ளைகளின் கல்வியில் முக்கிய இடம் வகிக்கும் முன் பிள்ளைப் பருவக் கல்வியை (முன்பள்ளிக் கல்வி) வழங்குவது தொடர்பில் தேசிய திட்டமொன்றை தயாரிக்கவேண்டியுள்ளதுடன், முன் பள்ளி நிர்வாகிகளுக்கு முறையான பயிற்சியும், ஆட்சேர்ப்பு முறைமையுடன் சம்பள முறையொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.129/11

95.

கௌரவ அஜித் குமார,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய ஆய்வு நூலொன்றைத் தயாரித்தல்,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, தொல்பொருளியல் மற்றும் கலாசார ரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்கள் பற்றிய பரந்த ஆய்வினை மேற்கொண்டு, அது தொடர்பில் அறிவியல் பெறுமதிமிக்க ஆய்வு நூலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.130/'11

96.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

97.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

98.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

99.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

100.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

101.

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

102.

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.140/'11

103.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தெங்குக் கமத்தொழில், தெங்கு சார் வளங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் ஒழுங்கமைத்தல்,— வர்த்தக ரீதியான உற்பத்திகளில் தென்னை முக்கிய இடத்தை வகிப்பதால், வளங்களையும், சுற்றாடலையும் நிலைத்து நிற்கச் செய்கின்ற அதேவேளை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடக்கூடியளவு பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் வளர்ச்சியடையும் அபிவிருத்தியை ஒழுங்கமைத்து தென்னைக் கைத்தொழில் மற்றும் தென்னை சார் வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அர்த்த புஷ்டியுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.141/'11

104.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

105.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

106.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

107.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.146/11

108.

கௌரவ திலங்க சுமதிபால,— ஆயுத விற்பனைக்கான முறைசார்ந்த கட்டுப்பாட்டு முறையொன்றைத் தாபித்தல்,— சர்வதேச ரீதியில் எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆயுத விற்பனை நடைமுறையிலுள்ளதன் விளைவாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் வந்து குவிதல் மற்றும் அவ்வாறான நாடுகளில் இடம்பெறும் முறைசாராத ஆயுதச் சுற்றோட்டமானது சமூகத்தின் சுதந்திரத்திற்கு பாரிய தடையாகவும் சனநாயக ரீதியில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் தாக்கம் ஏற்படுத்துவதாகும், அத்துடன் நாட்டில் போதைப்பொருள் மற்றும் விபச்சாரத் தொழில் போன்ற சட்டவிரோதச் செயல்கள் விரிவடைவதற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. மேற்படி நிலைமைகளைத் தடுத்து ஒழுக்கம் பேணுகின்ற, சட்டத்தை மதிக்கின்ற, விழுமியங்கள் நிறைந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புதல் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் எதிர்பார்ப்பாக உள்ளதாலும், ஆயுத விற்பனை உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக சமூக போராட்டங்களைக் குறைத்து சமூக நலனோம்புகையை உறுதி செய்தல் இன்றைய உலகின் எதிர்பார்ப்பாகவுள்ளதாலும், மேற்குறிப்பிட்ட துர்நடத்தைகளை ஒழிப்பதற்காக சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களுக்கு ஏற்புடையதாக தேசிய சட்ட முறைமையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.147/11

109.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,— மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

110.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

111.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

112.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

113.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

114.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

---

## 2012 யூன் 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0773/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010.06.29 இல் விநியோகிக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம் கிரேலைன் இன்நெஷனல் பிரைவேட் லிமிரெற்றிற்கு ரூபா. 400 மில்லியனுக்கான வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி அறிக்கையின் பிரகாரம்,

(i) அவ் வங்கி உத்தரவாதம் ஏன் வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) பிரதி உபகாரமாக கிடைத்த நன்மைகள் என்னவென்பதையும்;

(iii) அப் பொறுப்பு எப்போது விடுவிக்கப்படும் என்பதையும்;

(iv) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சி.டபிள்யூ.ஈ) அரச வர்த்தக லிமிரெற் அல்லது அரச வர்த்தக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட ரூ. 4200 மில்லியன் வங்கி உத்தரவாதம் ஏன் விடுவிக்கப்படவில்லையென்பதையும்;

(v) மேற்படி உத்தரவாதங்கள் இருப்பதனால் கிடைக்கின்ற நன்மைகள் என்னவென்பதையும்;

(vi) இலங்கை மின்சார சபையை மேலும் கடனுக்கு இட்டுச் செல்லும் இலங்கை மின்சார சபையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களுக்கு ரூ. 120 பில்லியன் வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(vii) இந்நிலைமைய சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்;

(viii) மக்கள் வங்கியின் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அரசாங்கத்தினால் பணம் எடுக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1158/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன கல்வி வலயத்துக்கு உரித்தான முலட்டியன கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிர்வகிக்கப்படும், மாறை/ அதபத்துகந்த கனிஷ்ட கல்லூரியின் ஆசிரியர் விடுதியின் கூரையின் மரந்தடிகள் உக்கி, கதவுகள், யன்னல்கள் மற்றும் சுவர் பெருமளவு பழுதடைந்த நிலைமைக்கு உள்ளாகி உள்ளதென்பதையும்;

(ii) அத்தகையதொரு பழுதடைந்த ஆசிரியர் விடுதி இருப்பது அப்பாடசாலை மாணவர்களின் அலுவல்களுக்கு ஆபத்தானது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆபத்தான நிலையில் காணப்படும் மேற்படி ஆசிரிர் விடுதியை அகற்றிவிட்டு, புதியதோர் ஆசிரியர் விடுதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், தற்போது அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iv) ஆசிரியர் விடுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதியையும் ;

(v) நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள திகதியையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1691/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தபால் திணைக்களம் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுடன் மேற்கொண்டுள்ள சேவை உடன்படிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கைகளை மேற்கோண்டுள்ள நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்படையதாகமேற்கொள்ளப்பட்ட சேவை உடன்படிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் முடிவுற்ற திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தை வழங்கியவர்கள் யாரென்பதையும்;

(vi) மேற்படி உடன்படிக்கைகளின் கீழ் தபால் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெறும் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2099/ ’11

4.

கௌரவ கயந்த கருணாத்திலக்க,— பிரதம அமைச்சரும், பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாதுகாப்புப் படையில் கடமையாற்றுகின்ற இராணுவ வீரர்களுக்கு, அவர்களின் மூன்றாவது குழந்தை கிடைக்கின்ற போது ரூபா ஒரு இலட்சம் கொடுப்பனவை வழங்குவதாக 2011 ஆம் ஆண்டு வரவு செலவுதிட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட பிரேரணையை நடைமுறைப்படுத்தும் முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவு வழங்கப்படும் பாதுகாப்புப் படையின் பதவிகள் யாதென்பதையும்;

(iii) இதனைப் பெற்றுக்கொடுக்கும் போது முனைப்புச் சேவை கருத்திற் கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1639/ ’11

5.

கௌரவ புத்திக பத்திரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் மய்லகஸ்தன்னையில் அமைந்துள்ள, அரச உணவுக் களஞ்சியத் தொகுதியாக பயன்படுத்தப்பட்ட கட்டிடம் மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கட்டிட வளாகத்தில், பெருந்தொகையான அரசாங்க வாகனங்கள் துருப்பிடித்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளவாறு, அரச வளங்கள் அழிவடைவதற்கு இடமளித்தலானது ஒரு தேசிய இழப்பாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி உணவுக் களஞ்சியத் தொகுதி மற்றும் தொடர்புடைய ஏனைய வளங்களை விரைவில் பயனுள்ள நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1706/ '11

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் போக்குவரத்து அமைச்சின் செயற்பாட்டினையும்;

(ii) இந்த அமைச்சில் கடமையாற்றும் பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக நாட்டில் சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) உரிய பதிவுடன் சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்;

(iii) உரிய பதிவின்றி சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்;

(iv) 2000, 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சேவையிலீடுபடுத்தப்பட்ட தனியார் பஸ்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) கடந்த 8 வருட காலத்தின் போது தனியார் பஸ் கட்டணங்கள் எப்போது திருத்தம் செய்யப்பட்டன என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட பஸ் கட்டண அதிகரிப்புகள் யாவை என்பதையும்

அவர் ஆண்டு வாரியாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1905/ '11

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் காணிகளை அரசாங்கம் சுவீகரித்தல் சம்பந்தமான அதி விசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் மேற்படி வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானியின் பிரகாரம் அரசாங்கம் சுவீகரிக்கவுள்ள காணிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காணிகளின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் அத்துடன் ஒவ்வொரு காணி உரிமையாளரிடமிருந்தும் சுவீகரிக்கப்படும் நிலத்தின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கும் வர்த்தமானியை வெளியிடுவதற்கு முன்னர் அக்காணிகளில் இருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், சேதம் விளைவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்படி சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டதா என்பதையும்;

(v) மேற்படி சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கிய அதிகாரி யாரென்பதையும்;

(vi) அவ்வாறான அனுமதியை வழங்குவதற்கு இவருக்குள்ள தத்துவம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1707/ '11

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மொத்த சனத்தொகையினையும்;

(ii) 18 வயதிற்கு மேற்பட்டோரின் சனத்தொகையினையும்;

(iii) 18 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையினரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) வாக்குரிமை அகற்றப்பட்டவர்களாகவும், கிரமமாக வாக்களிக்க முடியாமலும் அதிகமான வாக்காளர்கள் இருக்கின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) வாக்காளர் இடாப்புக்களின் இற்றைப்படுத்தலை ஒவ்வொரு வருடத்தினதும் யூன் 1 முதல் யூலை 31 வரையான காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தாமல் அதனை வருடம் முழுவதும் செய்வதற்கு அனுமதிக்கப்படுமா என்பதையும்;

(ii) வாக்களிப்பதை ஒரு கட்டாயமான செயற்பாடாக மாற்றுவது சாத்தியமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1815/ '11

9.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அக்குரெஸ்ஸ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள திகிலி எலவுக்கு குறுக்காக அமைக்கப்பட்டுள்ள கனம்யகல பலகைப் பாலம் இற்றுப்போயுள்ளமை காரணமாக அதனைப் பயன்படுத்தும் மக்கள் கடும் ஆபத்தான நிலைமையை எதிர்நோக்கியுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்விடத்தில் புதிய பாலமொன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) தற்போது அதற்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அப்பணத் தொகை எவ்வளவு;

(iv) அதன் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1906/ '11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கை கனிப்பொருள்கள் கம்பனியினால் கனிய வளங்களை அகழ்வதற்காக கேள்விப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(i) மேற்படி கம்பனிகளின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்குதலை அங்கீகரித்துள்ள அதிகாரி அல்லது அதிகாரிகள் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கை கனிப்பொருள் கம்பனியின் பணிப்பாளராக பணியாற்றியுள்ளவர்களின் பெயர்கள் முகவரிகள் மற்றும் அப்பதவிக்கான தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை இலங்கை கனிப்பொருள் கம்பனி பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012, யூன் 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1065/ ’11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) முதலீட்டுச் சபை சட்டம் 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் கீழ் உருவாக்கப்படும் தொழிற்சாலைகள் மூலமாக 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலைவாய்ப்புகளின் மொத்த எண்ணிக்கையை தனித்தனியாக அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிதாக உருவாக்கப்பட்ட முதலீட்டுச் சபைக் கம்பனிகள் மூலமாக வருடாந்தம் மேற்கொள்ளக்கூடிய ஏற்றுமதியின் அளவையும்;

(ii) முதலீடுகளை மேற்கொள்ளும் பிரதான நாடுகளையும்;

(iii) வரி செலுத்தத் துவங்கும் காலப்பகுதி முதல், மேற்படி முதலீடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் வரித்தொகையின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1329/ ’11

2.

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தளை மாவட்டத்தில் யட்டவத்த கம்முல்ல ஹீன் எல பாலத்தை நிர்மாணிப்பதற்காக பல வருடங்களுக்கு முன்பு அடிக்கல் வைக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இப்பாலத்தை நிர்மாணிப்பதற்காக

(i) மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாது;

(ii) இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) நிதி முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(iv) வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின் உதவியளித்த நாடு மற்றும் பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டதா;

(ii) அவ்வாறாயின் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் முன்வைக்கப்பட்ட விலை மனுக்கள் வெவ்வேறாக யாவை;

(iii) பாலத்தின் நிர்மாண வேலைகளை மேற்கொண்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(iv) இந் நிறுவனத்துக்கு நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டதன் அடிப்படை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2037/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்திற்காக நிலக்கரியை வழங்கும் ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ள கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(ii) அந்த ஒப்பந்தம் அளிக்கப்பட்டபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கென கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த ஏனைய கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மின்வலு, எரிசக்தி அமைச்சு நியமித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு நிலக்கரியை வழங்கும் மேற்படி கம்பனிக்கு அளிக்கப்பட்டுள்ளதா என்பதைம்;

(ii) அந்த மதிப்பீட்டுச் சான்றிதழை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நிலக்கரியை வழங்கும் உடன்படிக்கை ஆரம்பமாகும் திகதி மற்றும் அமுலிலிருக்கும் கால எல்லை யாதென்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2011 ஒக்தோபர் மாதம் வரை எத்தனை மெட்ரிக் தொன் நிலக்கரி வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அந்தக் காலப்பகுதிக்கென உண்மையாகவே தேவைப்படும் நிலக்கரியின் அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1570/ '11

4.

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்வி காரியாலயத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற மாற/களுபோவிட்டியன மகா வித்தியாலயத்தின் சில கட்டிடங்கள் மிகவும் மோசமாக சேதமாகியுள்ளதென்பதையும்;

(ii) இப்பாடசாலையின் மாணவர்கள் மேற்படி சேதமடைந்துள்ள கட்டிடங்களில் மிக ஆபத்தான நிலையின் கீழ் கல்வி பயில்கின்றார்கள் என்பைதயும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்கு தேவையான நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இப்பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின் அதன் திருத்த நடவடிக்கைகள் எத் திகதியில் ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1749/ '11

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாராக தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களை அறிந்து கொள்வது இலங்கையில் சட்டபூர்வமானதா என்பதையும்;

(ii) இவ்வாறு தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களைப் பெறுவது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினையும்;

(iv) கடப்பாடுகள் தீவிர நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பெயர்களையும்;

(v) நபரொருவரின் அடிப்படை உரிமையில் தலையிடுகின்றதான தொலைபேசி உரையாடலை இடைமறித்துத் தகவல்களைப் பெறுகின்றமைக்கு அதிகாரமளிக்கக் கூடிய ஆளையும்;

(vi) தொலைபேசி உரையாடல் இடைமறிக்கப்பட்டு தகவல்கள் அறிந்து கொள்ளப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2039/ '11

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்களை இந்நாட்டு தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் ஒளிபரப்பும்போது அதன் ஒரு பகுதிக்காக அரசு அறவிடும் பணத் தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி அறவீட்டு முறை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) ஆரம்பித்த திகதி முதல் இன்றுவரை ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசை மூலமாகவும் அரசுக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அதிலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானம் யாதென்பதையும்;

(v) அந்தப் பணம் பயன்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இன்றளவில் மேற்படி அ(i) இன் அறவீடு நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1750/ '11

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உரிய செயல்முறைகளைப் பின்பற்றாமல் முப்படைகளை விட்டு விலகிய நபர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) படைகளை விட்டு அவர்கள விலகுவதற்கான காரணத்தினையும்;

(iii) அவர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையையும்;

(iv) அவ்வாறு விலகுவது இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கையினையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 3 வருடங்களாக முப்படைகளுக்கும் ஏற்பட்ட செலவினை வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1816/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்துக்குரிய தேவாலகம கிழக்கு கல்தெட்ட, புஹுல்ஹேன பாலம் வெள்ளப்பெருக்கு காரணமாக இடிந்துபோய் பல வருடங்கள் கழிந்துள்ளனதென்பதையும்;

(ii) இதனால் பகுதிவாழ் மக்கள் கடும் வசதியீனங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அதற்கு அவசியமான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாது;

(iv) பாலத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த கல்தெட்ட புஹுல்ஹேன பாலம் உரிய தரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்ததாக மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், இது சம்பந்தமாக முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொள்வாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2040/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மரக்கறிகளையும் பழங்களையும் ஏற்றிச்செல்வதற்கு பிலாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்தல் கட்டாயமாக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒரு பிலாஸ்டிக் கூடைக்கு செலவாகும் தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி கூடையொன்றில் சராசரியாக எத்தனை கிலோகிறாம் மரக்கறிகள் அல்லது பழங்களை பொதியிட முடியும் என்பதையும்;

(iv) ஒரு கூடையின் கொள்ளளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பொதியிடல் முறை தாபிக்கப்படுகின்றபோது உரிய ஆய்வொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த ஆய்வறிக்கையைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பிலாஸ்டிக் கூடைகள் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றதா இல்லாவிடின் இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(ii) பிலாஸ்டிக் கூடைகளை உற்பத்தி செய்யும் அல்லது இறக்குமதி செய்யும் நிறுவனத்தின் பெயர், முகவரி, பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) பிலாஸ்டிக் கூடை வழங்களுடன் தொடர்புடையதாக முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறையொன்று பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கு முன்வந்த கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் விலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2012 யூன் 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1066/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அண்மைய சனத்தொகைக் கணிப்பீடு, புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை மையமாக் கொண்டு,

(i) நாட்டில் எத்தனை கிராமங்கள் உள்ளன என்பதையும்;

(ii) ஒரு கிராமத்தில் சராசரியாக எத்தனை குடும்பங்கள் வாழ்கின்றன என்பதையும்;

(iii) நாட்டில் எத்தனை கிராம சேவகர்கள் பிரிவுகள் மற்றும் கிராம சேவகர் பதவிகள் உள்ளன என்பதையும்;

(iv) நாட்டில் எத்தனை பிரதேச செயலாளர்கள் உள்ளனர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு மாகாணத்திலும், மாவட்டத்திலும், தேர்தல் தொகுதியிலும், பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம சேவகர் பிரிவுகளிலும் எத்தனை கிராமங்கள் உள்ளன என்பதை தனித்தனியாகவும்;

(ii) மாவட்ட அடிப்படையில் மொத்த சனத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அடுத்த உத்தியோகபூர்வ சனத்தொகை கணிப்பீடு எப்பொழுது நடைபெறும் என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1330/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் இதுவரை கோரப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மருந்துகளை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்களை முன்வைத்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் தற்போது அத்தியாவசிய மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றதா;

(ii) அரச வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை;

(iii) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்து வகைகள் யாவை;

(iv) இந்நிலையைத் தவிர்த்து அரச வைத்தியசாலைகளுக்கு தட்டுப்பாடின்றி மருந்து வகைகளை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்வாரா;

(v) அவ்வாறாயின் அதற்காகக் கடைப்பிடிக்கப்படும் வேலைத்திட்டம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2041/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழை அச்சிடும் கேள்விப் பத்திரத்திற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) கேள்விப்பத்திரத்திற்கு விண்ணப்பித்திருந்த ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்திருந்த விலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்திருந்த நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கேள்விப் பத்திரக் குழுவிலுள்ள உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) குறித்த நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கேள்விப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1751/ '11

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரச துறையில் உருவாக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கையையும்;

(ii) 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) நாட்டில் தற்போதுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையையும்;

(iv) அரச துறையிலுள்ள பட்டதாரியொருவருக்கு வழங்கும் சராசரி சம்பளத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1817/ '11

5.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மொ/சி/கோன்கஸ்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயம் பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ 12 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள கஷ்டப் பிரதேச பாடசாலை என்பதையும்;

(ii) கட்டட வசதிகள் கிடைக்காமையால் அப்பாடசாலையின் வகுப்பறைகள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தகரக் கூடாரங்களிலேயே நடத்தப்பட்டு வருகின்றனவென்பதையும்;

(iii) மேற்படி நிலைமை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உயிர்களுக்கு ஆபத்தானதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலைமையின் கீழ் அப்பாடசாலையின் ஆசிரியர்கள் அல்லது மாணவர்களின் உயிர்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பினை வகிப்பவர் யார்;

(ii) நிலவுகின்ற பாதகமான நிலைமையைத் தவிர்த்து மொ/சி/கோன்கஸ்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயத்தில் நிலவுகின்ற கட்டடக் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அதற்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படடுள்ளனவா;

(iv) ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(v) பாடசாலைக் கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்ற திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2060/ '11

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பேணிவரப்படும் பதிவுசெய்யப்பட்ட பிரிவெனாக்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் தற்போது கல்வி பயின்றுவரும் மாணவ பிக்குமார்களின்/மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிக்கு மாணவர்களுக்கு/மாணவர்களுக்கு மாதாந்தம் ஏதேனும் கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், ஒருவருக்கென செலுத்தப்படும் பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "இதுவரை பிரிவெனா மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த ரூபா 1,000 நிதித் தொகையை ரூபா2,000 வரை அதிகரிக்கின்றேன்" எனும் வாக்குறுதி தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த திகதி யாதென்பதையும்;

(iii) அதன் கீழ் நலன்களைப் பெறுவோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1752/ '11

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரைக்கும் வருடாந்த அடிப்படையில்—

(i) முப்படைகளிலிருந்தும் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(ii) இராணுவத்தில் பிரிகேடியர் தரத்திலுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அல்லது அதற்கு சமனான கடற்படை மற்றும் விமானப்படையிலுள்ள அதிகாரிகளில் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் பெயர்களையும் அவர்களுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றங்களையும்;

(iii) அந்த அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனைக் காலத்தை வெவ்வேறாகவும்

அவர் சபைக்குத் தெரிவிப்பரா?

(ஆ) (i) தற்போதுள்ள நீதிமன்ற முறைமை இராணுவ நீதிமன்றத்தை அங்கீகரித்துள்ளதா என்பதனையும்;

(ii) அவ்வாறாயின் இராணுவ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையை இரத்துச் செய்வதற்கான சாத்தியம் உண்டா என்பதனையும்;

(iii) இராணுவ நீதிமன்றத்தின் தீர்மானங்களை தள்ளுபடி செய்வதற்கு அதிகாரமுடைய ஆளையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1818/ '11

8.

கௌரவ புத்திக்க பத்திரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தின் பிபில மெதகமபிரதேச செயலகப் பிரிவுக்குரிய கொட்டபோவ வீதியின் முதலாம் மைல் கல் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான பாரிய அளவிலான நெற்களஞ்சியமொன்று சுமார் இருபது வருட காலமாக எவ்விதமான பாவனைக்கும் எடுக்கப்படாமல் மூடப்படடுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி களஞ்சியத்தை புனரமைத்து மீண்டும் நெல்லைக் களஞ்சியப்படுத்தும் பொருட்டு பயன்படுத்த இயலுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில் , இதன் பொருட்டு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(ii) இன்றேல், வேறு ஏதெனுமொரு கைத்தொழிலை இங்கு ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில் , அத்திகதி யாது

என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2061/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஓய்வூதியம் பெறும் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுக்காக அரசினால் செயற்படுத்தப்படுகின்ற நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதித் திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு சுகாதார வசதிகளுக்காக மருந்துகள் மற்றும் மருத்துவ கட்டணங்களுக்கு வருடத்துக்கு ரூபா 10000/- பெறுமதியான சுகாதார காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவேன்' என்ற வாக்குறுதிக்கமைய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காப்புறுதித் திட்டம் யாதென்பதையும்;

(ii) இதன் கீழ் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடைய ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது நலன்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஓய்வுபெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது நலன்களாக செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், மேற்படி காப்புறுதித் திட்டத்தின் கீழ் நலன்களை பெற்றுக்கொடுத்தல் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

# 2012 யூன் 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1069/ '11

1.

கௌரவ.ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவி வழங்கும் துறைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உதவி வழங்கப்படும் துறைகளுள் அடையாளம் காணப்பட்ட ஐந்து துறைகள் தொடர்பாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ஏற்பட்ட மொத்தச் செலவினத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையையும்;

(ii) பணியாளர்கள் உற்பத்தி வீச்சினடிப்படையிலா அல்லது உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளினடிப்படையிலா அமர்த்தப்பட்டுள்ளனர் அல்லது அவர்கள் சாத்தியப்படும் போதெல்லாம் ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் முகமாக ஓர் குழாத்தில் உள்ளனரா என்பதையும்;

(iii) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலுள்ள நிபுணர்களின் பெயர்களையும்;

(iv) அவர்கள் நிபுணத்துவம் பெற்றுள்ள துறைகளையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1334/ '11

2.

கௌரவ புத்திக்க பத்திரண,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொழில்நுட்ப கல்வி, பயிற்சித் திணைக்களத்துக்குரிய நாடு முழுவதிலும் அமைந்துள்ள 38 தொழில் நுட்ப கல்லூரிகளில் தற்போது அரச நிரந்தர சேவையில் உள்ள வரவேற்பு உத்தயோகத்தர்கள், மின் தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் காய்ச்சி ஒட்டுனர்கள் ஆகிய ஊழியர்களுக்கு தற்போது ஒருவருடகாலமாக சம்பளம் செலுத்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்தப்படாமைக்கான காரணம் என்ன;

(ii) அவர்களுக்கு சம்பளம் செலுத்துவதில் ஏதேனும் இடையூறுகள் இருப்பின் அவற்றை நீக்கி விரைவில் அவர்களுக்கு சம்பளம் செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அவ்வாறெனின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2063/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் சர்வதேச நிதிப் பிரிவின் தலைவர் என இனங்காணப்பட்ட நபருக்கு எதிராக இலங்கை நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது இவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவை என்பதையும்;

(iii) எல்.ரீ.ரீஈ அமைப்பின் சர்வதேச நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வேறு ஆட்களுக்கு எதிராக இந்நாட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) ஆமெனில், அந்நபர்கள் யார் என்பதையும்;

(v) இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதன் அடிப்படை யாதென்பதையும்;

(vi) எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் சர்வதேச நிதிப் பிரிவின் தலைவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவில்லையெனின், இவர் இருக்கையில் வேறு ஆட்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதற்கும் தலைவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படாதிருப்பதற்குமான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2436/ '12

4.

கௌரவ ஆர். யோகராஜன்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு (டீ.ஐ.ஜீ) அண்மையில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் தொடர்பாக,

(i) விண்ணப்பதாரிகளின் பெயர்கள்;

(ii) பதவி உயர்வு வழங்கப்பட்ட அலுவலர்களின் பெயர்கள்

போன்ற விபரங்களை அவர் கூறுவாரா?

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்திகளுக்கும் சேவை மூப்பு நிலை மற்றும் தனிப்பட்ட சாதனை என்பவற்றின் அடிப்படையில் 70 புள்ளிகளும் மற்றும் நேர்முகப் பரீட்சையில் 30 புள்ளிகளும் வழங்கப்பட்டனவா என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) சேவை மூப்பு, தனிப்பட்ட சாதனைகள் மற்றும் அவர்களின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெற்ற புள்ளிகளையும்;

(ii) நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெற்ற நிலை மற்றும் மேலே (இ)(i) இன் அடிப்படையில் பெற்ற புள்ளிகள் ஆகியவற்றை

தனித்தனியாக இச்சபைக்கு அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) நேர்முகப்பரீட்சைச் சபையில் இருந்த உறுப்பினர்களின் பெயர்களையும்;

(ii) நேர்முகப் பரீட்சைச் சபையை நியமித்த அதிகாரியையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1753/ '11

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 முதல் 2011 வரை இலங்கையில் தொழில்புரிவதற்கு அனுமதியளிக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) இந்திய நாட்டவர்களுக்கான வீசா தேவைப்பாடுகளில் மிகுந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும்;

(iii) வருகைதந்துள்ள இந்தியர்களுக்கான வீசாவுக்கு ஏன் கட்டணம் அறவிடப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வேறு ஏதாவது நாட்டின் 500இற்கும் அதிகமான தொழிலாளர்கள் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) வெளிநாட்டவர்களை தொழில்புரிவதற்கு இங்கு அனுமதிப்பதால் இலங்கை பெற்றுக்கொள்ளும் நன்மைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1819/ '11

6.

கௌரவ புத்திக்க பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திவுல பெலஸ்ஸ மகாவெலி கிராமத்தில் அமைக்கப்பட்ட குடி நீர் வழங்கும் திட்டம், நீர் கிடைக்காத காரணத்தால் கைவிடப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நீர் வழங்கும் திட்டத்துக்கு செலவிடப்பட்ட தொகை யாது;

(ii) கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் நீர் பெறக்கூடிய சாத்தியத்தன்மை பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதா;

(ii) இச் சாத்தியக்கூறுக் கற்கை அறிக்கையின் பெறுபேறுகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திவுல பெலஸ்ஸ மகாவெலி கிராமத்தில் நீர் திட்டத்தை நிர்மாணிக்கின்ற போது முறைகேடான நிதிக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்றுள்ளதென பிரதேச மக்கள் குறை கூறுகின்றனர் என்பதை அவர் அறிவாரா;

(ii) அவ்வாறாயின், இது தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை நடாத்த நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) மேற்படி நீர் திட்டத்தை துரிதமாக மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) அவ்வாறாயின் அத் திகதி யாது;

(v) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2064/ '11

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தரைப்படையின் இசை வாத்தியக் குழு தலைமையகம் அமைந்துள்ள இடம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) இசை வாத்தியக் குழு தலைமையகத்தை வேறு இடத்துக்கு கொண்டுச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) இசை வாத்தியக் குழு தலைமையகம் தற்போது அமைந்துள்ள காணியை பயன்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள பணி யாதென்பதையும்;

(vi) மேற்படி காணியின் தற்போதைய சந்தைப் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இசை வாத்தியக் குழு தலைமையகம் பிறிதொரு இடத்துக்கு கொண்டுச் செல்லப்படுமாயின் அப்புதிய இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(ii) மேற்படி இடத்தின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி இடம் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1754/ '11

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 முதல் 20011 வரை இலங்கையில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ள சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) சீன நாட்டவர்களுக்கு வீசா தேவைப்பாடுகளில் அத்தகைய மிகுந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும்;

(iii) நாட்டிலே பெருமளவிலான வேலைவாய்ப்பின்மை உள்ளபொழுது பெரும் எண்ணிக்கையிலான சீனத் தொழிலாளர்களை வைத்திருப்பது எவ்வாறு நியாயப்படுத்தப்படும் என்பதனையும்;

(iv) பெரும் எண்ணிக்கையிலான சீனத்தொழிலாளர்களுக்குத் தொழில் வழங்குவதற்கான அனுமதியை அங்கீகரிப்பதனால் நாட்டிற்கு ஏற்படும் வருமான இழப்பையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1820/ ’11

9.

கௌரவ புத்திக்க பத்திரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் கம்புறுப்பிட்டிய, பிபுலேவெல, ருஹுனுகம எழுச்சிக் கிராம நிலத்தில் அமைந்துள்ள ரூபா கோடிக்கணக்குப் பெறுமதிவாய்ந்த கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) அரசுக்குச் சொந்தமான பெறுமதிவாய்ந்த சொத்துக்களை அழிவுறுவதற்கு இடமளிப்பது பாரியதொரு குற்றமாகும்என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட கட்டிடங்களையும் நிலத்தையும் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கானதொரு திட்டம் உள்ளதா;

(ii) அவ்வாறாயின் அத்திட்டம் யாது;

(iii) அத்திட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2065/ ’11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் மகா கனதரா குளத்தை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறைகளுக்கமைய வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த கேள்விப் பத்திரதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) கேள்விப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மகா கனதரா குளம் புனரமைக்கப்படுகின்ற போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக சனாதிபதி புலனாய்வுப் பிரிவால் கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் படி அதற்கு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(iii) அச்சந்தர்ப்பத்தில் இவர்கள் வகித்த பதவிகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின் தற்போது இவர்கள் சேவையாற்றும் இடங்கள் யாவையென்பதையும்;

(vi) தற்போது இவர்கள் வகிக்கும் பதவிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

*1.

கௌரவ கல்வி அமைச்சர்,— தேசிய கல்விக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு, —

இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் கல்வி முறையானது அளவுசார் ரீதியாக விருத்தியடைந்திருந்த போதிலும் ஒப்பீட்டளவில் பண்புரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் வளர்ச்சியடையாமையினால் ஆசிரியர்களுக்கும் மாணவ, மாணவியருக்கும் பெற்றோர்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தோன்றியுள்ளதாலும்,

அவ்விடயத்துடன் தொடர்புடையதாக கல்வித்துறையில் பலவிதமான முறையற்ற செயல்களும் அநீதியும் மாத்திரமின்றி மோசடியும் ஊழல்களும் இடம் பெறுவதாக சமூக அபிப்பிராயமொன்று தோன்றியுள்ளமையாலும்,

ஒட்டுமொத்தமான கல்வித்திடத்திலும் பாரிய மாற்றங்களும் பல்வேறு மறுசீரமைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்ற மக்கள் கருத்து உருவாகியுள்ளதாலும்,

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கினை மையமாகக் கொண்ட அபிவிருத்தி உபாய முறையைக் கவனத்திற் கொண்டும்,

ஒட்டுமொத்தமான இலங்கை மாணவர் சந்ததியினரின் எதிர்காலத்தை உருவாக்க ஏற்புடையதாகக் கூடியவாறு பாலர் பாடசாலைப் பருவத்திலிருந்து பல்கலைக்கழகக் கல்விவரை மாணவர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கு ஏதுவான வகையிலான தேசிய கல்வித் திட்டமொன்றை தயாரிப்பது காலந்தாழ்த்த இயலாததும், தேசிய முன்னுரிமை கிடைக்க வேண்டிய விடயமாக அமைவதாலும்,

(அ) முன்பள்ளிகள், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் ஏற்பட வேண்டிய அளவு ரீதியான, பண்பு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் உள்ளனவாவென்பதைக் கண்டறிவதற்காகவும் ,

(ஆ) தேசிய சமய, மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் பொருட்டு கல்வித் திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(இ) பிரிவேனாக் கல்வியில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(ஈ) முதலாந் தரத்திற்குச் சிறுவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திட்டவட்டமான வழிமுறையொன்று உள்ளதாவெனக் கண்டறிவதற்காகவும்,

(உ) அனைத்துப் பரீட்சைகளினதும் பரீட்சித்தங்களினதம் பெறுபேறுகளை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்வருதல் மற்றும் உயர்கல்விக்கான தகைமைகளைப் பெறாத மாணவர்களுக்காக கல்வித் திட்டத்திலுள்ளே வழங்கக்கூடிய மாற்று வழிமுறைகளை உருவாக்க வேண்டுமா என்பதைக் கண்டறிவதற்காகவும்,

(ஊ) பல்கலைக்கழகத்தில் பிரவேசிப்பதற்கான தகைமைகளைப் பெற்ற போதிலும் இலங்கைப் பல்கலைக்கழமொன்றில் பிரவேசிக்காமல் வெளிநாடுகளில் கல்விபெறும் பொருட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு இந்நாட்டிலேயே கல்விக்கான வாய்ப்புக்களை வழங்கக்கூடிய வழிமுறைகள் உள்ளனவாவென்பதைக் கண்டறிவதற்காகவும்,

(எ) கல்வித்திட்டம் அமுலாக்கப்படுகின்ற நிலையில் பிரதேச, இன மற்றும் சமய ரீதியில் நிலவுகின்ற முரண்பாடுகளை நீக்குவதற்காக மேற்கொள்ள வெண்டிய வழிமுறைகள் யாவையெனக் கண்டறிவதற்காகவும்,

(ஏ) தேசிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகையில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் உருவாக வேண்டிய இடைத்தொடர்புகளின் தன்மை பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(ஐ) கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலையதிபர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களை உள்ளிட்ட ஒட்டுமொத்தமான கல்விமான்களின் பொறுப்பையும் கடமையையும் நிச்சயித்துக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவையென்பதைக் கண்டறிவதற்காகவும்,

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென்று இச்சபை, தீர்மானிக்கின்றது.

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அதன் அறிக்கையை அதன் முதலாவது கூட்டத்தில் இருந்து மூன்று மாத (03) காலப்பகுதிக்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படுகின்ற அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்குச் சமப்பித்தல் வேண்டும்.

(3) அக்குழுவானது,

(அ) அதன் கூட்டநடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கு அதிகாரமுடைய தாயிருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவின் முன் தோற்றுமாறு எவரையும் கட்டளையிட்டழைப்பதற்கும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடவும் மேலுள்ள விடயத்தைப் பூரணமாக ஆராய்வதற்குத் தேவையானதெனக் கருதும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மொழியிலான அனைத்துச் சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளவும் பொறுப்பேற்கவும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

(இ) குழுவுக்குத் துணைபுரியவென உரிய துறைகளில் சிறப்புத் தகுதிகள் உடையோர் மற்றும் நிபுணர்கள் ஆகியோரின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

2.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க

கௌரவ எச்.எம்.எம். ஹரிஸ்

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ அர்ஜுன ரனதுங்க

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ ஜே. ஸ்ரீ ரங்கா

கௌரவ ஹரின் பெர்னாந்து,— நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமை தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றமையாலும்,

இத்தட்டுப்பாட்டிற்கான காரணங்களை கௌரவ சுகாதார அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளமையாலும்,

இந்த நிலையை நிவர்த்திப்பதற்குப் பரிகார நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படாவிடில் அது ஒரு பேரழிவிற்கு இட்டுச் செல்லுமாகையாலும்,

(அ) இப் பற்றாக்குறைக்கான காரணங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கும்,

(ஆ) நிலைமையைச் சமாளிப்பதற்குத் தேவையான குறுகியகால நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்,

(இ) எதிர்காலத்தில் இந்த நிலைமை மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்குத் தேவையான நிரந்தர நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்,

பாராளுமன்றத் தெரி குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும் என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எதுவாக இருந்த போதிலும், குழுவானது இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.38/ ’10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ அகில விராஜ காரியவசம்

கௌரவ ஜெ. ஸ்ரீ ரங்கா

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க

கௌரவ ஹரின் பெர்னாந்து

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ அர்ஜுன ரனதுங்க

கௌரவ நிமல் விஜேசிங்க,— கொழும்பு நகரத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

கடந்த பல தினங்களாக கொழும்பு மாநகர சபை பிரதேசத்திலும் கொழும்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் மிகக் கடுமையான வெள்ளம் ஏற்பட்டிருப்பதாலும்,

கொழும்பு மாநகர சபை மற்றும் மாவட்டம் ஆகிய இரண்டையும் சேர்ந்த மக்களுக்கு இந்நிலைமை வழக்கமாக மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வாகியுள்ளதாலும்,

இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்புமிக்கவர்களால் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப் படாதுள்ளமையினாலும்,

இந்த வெள்ள நிலைமை மீண்டும் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதுள்ளதாலும்,

காலப்போக்கில் நிலைமை மேலும் மோசமடைந்து சென்றுள்ளதாலும்,

வெள்ளம் வற்றியதும் எல்லாவற்றையும் மறந்துவிடும் போக்கு காணப்படுவதாலும்,

இது மிகவும் திருப்தியற்ற ஒரு நிலைமை என்பதாலும்,

(அ) கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மாவட்டத்திலும் மீண்டும் மீண்டும் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வதற்கும்,

(ஆ) மேலே சொல்லப்பட்டவாறு வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான உடனடி மற்றும் குறுகிய கால நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கும்,

(இ) இந்தப் பிரச்சினை மீண்டும் மீண்டும் ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுப்பதற்கான வழிவகைகைள விதந்துரைப்பதற்கும், பாராளுமன்றத் தெரி குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நட்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.58/ ’10

4.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ டி. எம். சுவாமிநாதன்

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ஜெ. ஸ்ரீரங்கா,— தேர்தல்களுடன் தொடர்புபட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், திருத்தங்களை விதந்துரைப்பதற்குமான பாராளுமன்றத் தெரி குழு,—

இலங்கையில் தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கு கடந்த பல வருடங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினாலும்;

தேர்தல் மறுசீரமைப்பைப் பற்றி ஆராய்வதற்கு, 5 ஆவது பாராளுமன்றத்தின் போதும் 2006ஆம் ஆண்டில் 6ஆவது பாராளுமன்றத்தின் போதும் நியமிக்கப்பட்டவை அடங்கலாக பல சந்தர்ப்பங்களில் தெரிகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினாலும்;

இக்குழுக்களால் பல இடைக்கால அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

இக்குழுக்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமையினாலும்;

(அ) தேர்தல்கள் தொடர்பான சட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம், உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் சட்டம், மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றுக்கு கடந்த பல வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திருத்தங்கள் மற்றும் மேலே சொல்லப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்கதாக ஆக்கப்பட்ட விசேட ஏற்பாடுகள் ஆகியவற்றுடன் சேர்த்து மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும்;

(ஆ) இந்தச் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், திருத்துவதற்கும், ஒருங்கிணைப்பதற்குமான தேவையை ஆராய்வதற்கும்;

(இ) தேர்தல்கள் தொடர்பான தற்போதைய சட்டங்களில் அவசியமான சீர்திருத்தங்களையும் திருத்தங்களையும் விதந்துரைப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிகப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல.95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது —

(அ) அதன் நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

5.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க,— அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்வதற்கும் அது நடைமுறைப்படுத்துவதற்காக மேலும் ஏதேனும் திருத்தங்கள் அவசியமா என்பது பற்றி அறிக்கை செய்வதற்குமான பாராளுமன்றத் தெரிகுழு,—

2001 ஆம் ஆண்டில் அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு சான்றுப்படுத்தப் பட்டுள்ளதாலும்;

சொல்லப்பட்ட திருத்தத்தின் ஏற்பாடுகள் பல்வேறு அரச நிர்வாக மற்றும் நீதித்துறை நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான பல முக்கியமான சிறப்பம்சங் களை அறிமுகப்படுத்தியும் உள்ளடக்கியுமிருப்பதாலும்;

சொல்லப்பட்ட திருத்தங்கள் நீதியானதும் சுதந்திரமானதுமான சமூகமொன்றை உறுதிப்படுத்துவதைக் நோக்காகக் கொண்டிருப்பதாலும்;

அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாலும்;

(அ) அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடை முறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்வதற்கும்;

(ஆ) அதன் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

(இ) மேலும் ஏதேனும் திருத்தங்கள் அவசியமா என்பதைப் பரிசீலிப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன்போ தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்க ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதிசெய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

பா.66/ '10

6.

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ மங்கள சமரவீர,— அரச நிதி பற்றிய குழு,—

எதிர்க்கட்சி உறுப்பினரொருவர் தவிசாளராக இருக்கக்கூடிய விதத்தில் தெரிவுக் குழுவினால் பெயர் நியமனம் செய்யப்பட்ட பதினொரு உறுப்பினர்களையும், தவிசாளர் ஒருவரையும் கொண்ட அரச நிதி பற்றிய குழு எனப் பெயரிடப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றை பரிசீலித்தல் குழுவின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் கீழான வருமான சேகரிப்பு.

(ஆ) அரசியலமைப்பின் 149(1) ஆம் உறுப்புரையின் கீழ் திரட்டிய நிதியத்திலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகள்.

(இ) அரசியலமைப்பின் 149(1) ஆம் உறுப்புரையின் கீழ் சட்டத்தினால் விதிக்கப்பட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பொது நிதியத்தைப் பயன்படுத்தல்.

(ஈ) அரசியலமைப்பின் 150(1) ஆம் மற்றும் 150(2) ஆம் உறுப்புரையின் கீழ் பொதுநிதியத்தைப் பிரயோகித்தல்.

(உ) நடப்பு வருடத்திற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் தொடர்பான பின்னடைவுகள், ஒதுக்கீடுகளின் மாற்றம் மற்றும் செலவு செய்யப்படாத மிகுதிகளின் மாற்றம்.

(ஊ) நடப்பு வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

(எ) பொதுக்கடன் மற்றும் கடனை மீளச் செலுத்துதல்.

(ஏ) 2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) சட்டத்தின் கீழான அறிக்கைகளும் கூற்றுகளும்.

(3) மேலே பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அவ்வப்போது குழு அறிவிக்க வேண்டும்.

(4) சட்டமூலத்தின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு வார காலப்பகுதியினுள், அரசாங்கத்தின் கொள்கை வரம்பிற்குள் பணம் முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை உள்ளடக்கிய மதிப்பீடுகள் பற்றிய ஓர் அறிக்கையை குழு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டிற்குப் பின்னர் 4 நாட்களுள் மொத்த மதிப்பீட்டுச் செலவுகளையும் வரவுகளையும் தீர்மானிப்பதற்கு அடிப்படைகளாகப் பயன்படுத்தப்பட்ட நாணய, நிதி மற்றும் பொருளாதார ஊகங்கள் தொடர்பான அறிக்கையைக் குழு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ப.67/ '10

7.

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ ரஊப் ஹக்கீம்

கௌரவ மங்கள சமரவீர,— மேற்பார்வை நிலையியற் குழுக்கள்,—

(அ) "மேற்பார்வை நிலையியற் குழுக்கள்" என அழைக்கப்படும் கீழே குறிப்பிடப் பட்டவாறான குழுக்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்பதோடு, அவை ஒவ்வொன்றும் தமது நியாயாதிக்கத்தினுள் வரும் எல்லா சட்டமூலங்கள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக பரிசீலிப்பதற்கான நியாயாதிக்கத்தையும் தொடர்புடைய பணிகளையும் கொண்டிருக்க வேண்டுமெனவும்.

(ஆ) அவற்றின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட சகல சட்டமூலங்கள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அவற்றின் அறிக்கைக்காக சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

1. சர்வதேச தொடர்புகள்

   சர்வதேச வர்த்தகம் அடங்கலாக வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு, சர்வதேச நிறுவனம், சர்வதேச மாநாடுகள் மற்றும் உடன்படிக்கைகள், பிராந்திய நிறுவனங்கள்.

2. தேசிய பாதுகாப்பு

   இலங்கையின் பாதுகாப்பு அடங்கலாக, ஆயுதப் படைகள், புலனாய்வு, பொதுச் சட்டமும் ஒழுங்கும், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு, வெளிநாடுகளுடனான ஒத்துழைப்பு.

3. கமத்தொழில் மற்றும் காணிகள்

   பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அடங்கலாக மகாவலி அதிகார சபை, காணி மற்றும் நீர்ப்பாசனம்.

4. மனித வளங்கள் மற்றும் கலாசாரம்

   கல்வி அடங்கலாக, பயிற்சி, இளைஞர், விளையாட்டு, கலாசாரம் மற்றும் மத அலுவல்கள்.

5. மனித குடியேற்றம் மற்றும் எரிசக்தி

நகர மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு, நெடுஞ்சாலைகள், வீதிகள், புகையிரதம், கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, தபால் மற்றும் தொலைத் தொடர்பாடல்கள்.

6. மனித சேமநலன்கள்

சுகாதாரம் அடங்கலாக, சமூக சேமநலன்கள், வறுமை ஒழிப்பு, அங்கவீனர், சிரேஷ்ட பிரசைகள் மற்றும் சிறுவர் சேமநலன்.

7. உள்ளக நிர்வாகம்

8. சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்

நீர் முகாமைத்துவம் அடங்கலாக, நீரக வள மூலங்கள், விஷேட பொருளாதார வலயங்கள் மற்றும் கடற்றொழில்.

9. சட்ட மற்றும் மகளிர் விவகாரம்

நீதிமன்றங்கள் அடங்கலாக, மனித உரிமைகள், ஊடகங்கள், தொழிலாளர், தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் பால்நிலை.

(இ) அரசியலமைப்பின் உறுப்புரைகள் 44(இ) மற்றும் 45(1) யின் கீழ் அமைச்சுகளுக்கு குறித்தொதுக்கப்படும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை சட்டவாக்க மேற்பார்வை நோக்கத்துக்காக உரிய நிலையியற் குழுவுக்கு பாராளுமன்றம் ஒப்படைத்தல் வேண்டும்.

2. (அ) பின்வரும் விடயங்களில் பாராளுமன்றத்துக்கு உதவுவதற்காக பந்தி ( ஆ) இல் சொல்லப்பட்டுள்ள பொதுவான மேற்பார்வைப் பொறுப்புகளை பல்வேறு மேற்பார்வை நிலையியல் குழுக்கள் கொண்டிருத்தல் வேண்டும்:

(i) (அ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்களின் பிரயோகம், நிர்வாகம், நிறைவேற்றம் மற்றும் பயனுறுதி; மற்றும்

(ஆ) புதிய அல்லது மேலதிக சட்டங்களை ஆக்குவதற்கான அவசியம் அல்லது விரும்பத்தக்க தன்மையைக் குறித்துக் காட்டக்கூடிய நிலைமைகளும் சூழ்நிலைகளும்; ஆகியவை பற்றிய அதன் பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடு; மற்றும்

(ii) சட்டங்களை வகுத்தல், பரிசீலித்தல் மற்றும் இயற்றுதல் அல்லது அவற்றுள் மாற்றங்கள் செய்தலும் தேவையான அல்லது பொருத்தமான அத்தகைய மேலதிக சட்டவாக்கமும்.

(ஆ) ஒரு குழுவின் நியாயாதிக்கத்தினுள் வருகின்ற பிரச்சினைகளைக் கையாளும் சட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன பாராளுமன்றத்தின் நோக்கத்திற்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் அவை தொடரப்பட வேண்டுமா, கட்டுப்படுத்தப்பட வேண்டுமா அல்லது நீக்கப்பட வேண்டுமா என்பதையும் நிர்ணயிப்பதற்கு பின்வரும் விடயங்களை ஒவ்வொரு குழுவும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(i) அதன் நியாயாதிக்கத்தனுள் வரும் விடயங்களை கையாளும் சட்டவாக்கக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரயோகம், நிர்வாகம், நிறைவேற்றம், மற்றும் பயனுறுதி;

(ii) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்களை கையாளும் சட்டவாக்கக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் நிர்வாகம் மற்றும் நிறைவேற்றத்துக்கான பொறுப்புகளைக் கொண்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் ஒழுங்கமைப்பும் தொழிற்பாடும்;

(iii) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்கள் தொடர்பாக (அது தொடர்பான ஒரு சட்டமூலம் அல்லது தீர்மானம் அறிமுகப்படுத்தப் பட்டிருப்பினும் இல்லாவிடினும்) கையாளும் புதிய அல்லது மேலதிக சட்டவாக்கத்தின் அவசியத்தை அல்லது விரும்பத்தகுந்த தன்மையை குறித்துக்காட்டும் ஏதேனும் நிலைமைகள் அல்லது சூழ்நிலைகள்; மற்றும்

(iv) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்கள் பற்றிய எதிர்கால ஆய்வுகளும் எதிர்வு கூறலும்.

(இ) ஒவ்வொரு குழுவும் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவசியமானது அல்லது பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய புலனாய்வுகளையும் ஆய்வுகளையும் எந்நேரத்திலும் நடத்தலாம்.

(ஈ) பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கி ஆறு வாரங்கள் பிந்தாமல், ஒவ்வொரு நிலையியல் குழுவும் அந்தப் பாராளுமன்றத்திற்கான அதன் மேற்பார்வைத் திட்டத்தினை வகுக்க வேண்டும். அத்தகைய திட்டம் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழுவும் அதன் திட்டத்தினை உருவாக்குகையில், இயலுமான அளவிற்கு

(i) இவ்வாறான சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்களினை மீளாய்வு செய்கையில், குழுக்களுக்கு இடையில் ஆகக்கூடுதலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப் பினை உறுதிப்படுத்து முகமாக, இதேபோன்ற அல்லது இது போன்றவற்றுடன் தொடர்புடைய சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்கள் மீது நியாயத்துவத்தினைக் கொண்ட ஏனைய குழுக்களுடன் கலந்தாலோசித்தல். அத்துடன் அவ்வாறான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை உறுதிப் படுத்துவதற்காக எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கை களின் விளக்கங்களை அதன் திட்டத்தில் உள்ளடக்குதல்.

(ii) தெளிவற்றதாக இருக்கின்ற, தன்னிச்சையானதாக இருக்கின்ற அல்லது அர்த்தமற்றதாக இருக்கின்ற அல்லது தனிநபர்களுள் மீது மோசமான நிதிச் சுமைகளை சுமத்துகின்ற அரசாங்கத்தின் விதிகள், ஒழுங்கு விதிகள், நியதிச் சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்மானத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட பிரச்சினைகளை மீளாய்வு செய்தல்.

(iii) அவ்வாறான சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், அல்லது நிரந்தரமான வரவு - செலவுத் திட்ட அதிகார சபை அல்லது நிரந்தரமான நியதிச் சட்ட அதிகார சபை ஆகியவற்றின் கீழ் இயங்கும் முகவர்கள் மீதான மீளாய்வுவினை அதன் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு முன்னுரிமையை வழங்குதல்.

(iv) அதன் நியாயாதிக்கத்தின் கீழுள்ள முக்கிய சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்கள் 10 வருடங் களுக்கு ஒரு தடவை மீளாய்வுக்கு உட்படுவதை உறுதிப்படுத்துவதைப் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

(உ) மேற்பார்வைத் திட்டங்களின் பயனுறு ஒருங்கமைப்பை உறுதி செய்வதற்கும் இவ்வுப வாசகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கும் குழுக்கள் மேற்கொள்ளக் கூடிய விதப்புரைகளுடன் அக்குழுக்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை பாராளுமன்ற அலுவல்கள் குழு பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்து ஒன்பது வாரங்கள் கடப்பதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

3. (அ) பாராளுமன்றமானது எந்த ஒரு விடயத்தினையும் எந்த ஒரு மேற்பார்வை நிலையியற் குழுவிற்கும் ஆற்றுப்படுத்தலாம்.

(ஆ) அமைச்சர் ஒருவர் அவருக்குக் கீழ்வரும் விடயம், செயற்பாடு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்ட சம்பந்தப்பட்ட மேற்பார்வை நிலையியற் குழுவிற்கு எந்த ஒரு விடயத்தினையும் ஆற்றுப்படுத்தலாம்.

4. (அ) சபாநாயகர், ஒவ்வொரு சட்டமூலத்தினையோ, ஒழுங்குவிதியினையோ, தீர்மானித்தினையோ அல்லது இந்த நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 1 ( அ) பந்தியின் கீழ் பெயரிடப்பட்ட மேற்பார்வை நிலையியற் குழுவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள விடயம் தொடர்புடைய வேறு ஏதாவது விடயத்தினையோ ஆற்றுப்படுத்தலாம்.

(ஆ) 1(அ) பந்தியின் கீழ் ஏற்பாடொன்றின் விடயப் பொருள் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்ட ஒவ்வொரு குழுவும் அவ்வாறான ஏற்பாட்டினைக் கருத்திற்கொண்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதன் சாத்தியமான உச்சப்பட்ட அளவினை உறுதிப்படுத்தும் வகையில் பந்தி 4 (அ) இன் கீழ் சபாநாயகர் விடயங்களை ஆற்றுப்படுத்தலாம்.

(இ) விடயத்தினை ஆற்றுப்படுத்தல் தொடர்பாக பந்தி (அ) மற்றும் (ஆ) இன் கீழ் செயலாற்றும் போது சபாநாயகர்,

(i) ஆரம்ப நியாயாதிக்கத்திற்கான குழுவினை நியமிக்கலாம்.

(ii) ஆரம்பத்தில் அல்லது ஆரம்ப நியாயாதிக்கக் குழுவினால் அதன் கருத்துக்களுக்காக விடயமானது அறிக்கையிடப்பட்டதன் பின்னர் பரிசீலனைக்காக விடயத்தினை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலதிகக் குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

(iii) ஆற்றுப்படுத்தலினை பொருத்தமான காலவரையறைகளுக்கு உட்படுத்தலாம்; மற்றும்

(iv) பொருத்தமானது எனக் கருதப்படக்கூடிய அவ்வாறான ஏனைய ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

(ஈ) அபிப்பிராயத்தினை வழங்கும் குழுவின் பொறுப்பின் பரப்பின் கீழ்வரும் விடயங்களுடன் மாத்திரமே அபிப்பிராயமானது சம்பந்தப்படலாம்.

(உ) ஆரம்ப நியாயாதிக்கக் குழுவானது ஒரு காலக்கெடுவினை விதிக்கலாம். அதனுள் குழு அபிப்பிராயத்தினைக் கோரும். அத்துடன் அது ஆரம்ப நியாயாதிக்கக் குழுவில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமாயின், அக்காலக்கெடுவின் முன் அதனை வழங்க வேண்டும்.

5. (அ) நியாயாதிக்கத்தினைப் பயன்படுத்தும் ஒவ்வொரு குழுவும், குழுவினால் கவனத்தில் கொள்ளப்படும் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஓர் அறிக்கையினைச் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறான அறிக்கைகள் பாராளுமன்றத்தின் சபாபீடத்தின் முன் சமர்ப்பிக்கப்பட சபாநாயகர் ஏற்பாடு செய்வார்.

(ஆ) (i) எந்தவொரு சட்டமூலம் அல்லது ஒழுங்கு விதி மீதான குழுவின் எந்த அறிக்கையும், இணைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு, அவ்வாறானவை இருப்பின், வரைபுத் திருத்தங்களை, குறுகிய நியாயாதிக்கங்களின் படி பொருத்தமானதெனின், உள்ளடக்க வேண்டும்.

(ii) ஒரு சட்டமூலத்திற்கான அவ்வாறான எந்தவொரு திருத்தமும், அந்தச் சட்ட மூலத்தினை் குழுநிலையின் போது, தவிசாளரினால் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட வேறு உறுப்பினரினால் பிரேரிக்கப்பட்ட திருத்தமாக, நிலையியற் கட்டளை 56 இன் கீழ் பாராளுமன்றத்திற்கு சபாநாயகரினால் சமர்ப்பிக்கப்படும்.

(iii) ஒழுங்குவிதி ஒன்றிற்கான அவ்வாறான எந்தத் திருத்தமும், குழுவின் தவிசாளரினால் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட வேறு ஓர் உறுப்பினரினால் பிரேரிக்கப்பட்ட திருத்தமாக; சபாநாயகரினால் சமர்ப்பிக்கப்படும்.

(இ) பாராளுமன்றமானது அதன் முன்னால் சமர்பப்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு சட்டவாக்கம் சாராத அறிக்கையின் விதப்புரைகளினையும் பிரேரணை மூலம் அங்கீகரிக்கலாம்.

6. (அ) ஒவ்வொரு நிலையியற் குழுவும் அதன் கூட்டங்கள் பற்றிய கால சூசிகையினைத் தயாரித்து அதனைச் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கும்.

(ஆ) ஒவ்வொரு நிலையியற் குழுவும், மாதத்தில் இரண்டு நாட்களுக்குக் குறையாமல் கூடும். ஒவ்வொரு நிலையியற் குழுவினதம் கூட்டங்கள் சபாநாயகர் அங்கீகரித்த அதன் சூசிகை / நேர அட்டவணைக்கு அமைவாகக் கூட்டப்படும்.

(இ) எந்தவொரு நிலையியற் குழுவினதும் மேலதிகக் கூட்டங்கள் ஒன்றில் பாராளுமன்றத்தின் வேண்டுகோளின்படியோ அல்லது நிலையியற் குழுவின் உறுப்பினர்களில் அரைவாசிப் பேரின் வேண்டுகோளின்படியோ கூட்டப்படலாம்.

(ஈ) எந்தவொரு நிலையியற் குழுவும் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பாக அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டு எட்டு வாரங்கள் கடந்த பின்னர் அவ்விடயம் தொடர்பான முன்னேற்றம் குறித்து ஏதாவது நிலையியற் குழு ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் கோரிக்கை விடுக்கலாம். அத்தகைய கோரிக்கை கிடைக்கப் பெற்றதன் பேரில் அத்தகைய நிலையியற் குழு இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை பாராளுமன்ற சபாபீடத்தில் இடப்படல் வேண்டும்.

7. ஒவ்வொரு நிலையியற் குழுவும் பாராளுமன்ற பதவிக்காலம் வரை செயற்படும்.

8. (அ) பின்வருவோரை தவிர்ந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் நிலையியற் குழுக்களின் உறுப்பினர்களாக பணியாற்ற தகுதியுடையோராவார்:

(i) சபாநாயகர்

(ii) பிரதிச் சபாநாயகர்

(iii) குழுக்களின் பிரதித் தவிசாளர்

(iv) பிரதம அமைச்சர்

(v) சபை முதல்வர்

(vi) எதிர்க்கட்சித் தலைவர்

(vii) அரசியலமைப்பின் 44(1) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள்.

(viii) அரசியலமைப்பின் 45(1) இன் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சரது நியாயாதிக்கத்தின் கீழ் வராத அமைச்சுக்களின் விடயங்களையும் பணிகளையும் கொண்ட அல்லது உறுப்புரை 4(4) இன் கீழ் விடயங்களும் பணிகளும் குறித்துரைக்கப்பட்ட அமைச்சர்கள்.

(ஆ) தகுதியுடைய ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு நிலையியற் குழு உறுப்பினராக பணியாற்றுதல் வேண்டும். 8 (அ) (viii) பந்தியின் கீழ் வராத பிரதி அமைச்சர்களும், அமைச்சர்களும் தாம் எந்த அமைச்சரவை அமைச்சின் கீழ் பணியாற்றுகின்றார்களோ, அந்த அமைச்சின் கீழ் வரும் ஏதேனும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் அதே நியாயாதிக்கங்கள் மற்றும் பணிகளைக் கொண்ட ஏதேனும் நிலையியற் குழுவில் பணியாற்றுதல் ஆகாது.

(இ) (i) சபநாயகர், தகுதியுடைய உறுப்பினர்களின் நிரல் ஒன்றை தயாரித்தல் வேண்டும்.

(ii) தகுதிவாய்ந்த உறுப்பினர்களின் பட்டியலின் ஒவ்வொரு நிலையியற் குழுவினதும் உறுப்பாண்மை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுவினதும் எண்ணிக்கைக்கு அமைய சபாநாயகர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஈ) பாராளுமன்றத்திலிருக்கும் கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள் ஒவ்வொரு நிலையியற் குழுவிற்குமான தமது உறுப்பினர் பெயர் நியமனங்களை சபாநாயருக்கு சமர்ப்பிக்க வேண்டும். தெரிவுக் குழுவிடம் கலந்தாலோசித்து சபாநாயகர் அத்தகைய பெயர்களை பாராளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும்.

(உ) பாராளுமன்றத்திலிருக்கும் ஏதேனும் கட்சியின் அல்லது நிலையியற் குழுவின் தலைவர் 8(ஈ) பந்தியின் கீழ் பெயர் நியமனம் செய்யப்பட்ட அத்தகைய எவரேனும் உறுப்பினரை அத்தகைய குழுவிலிருந்து அகற்றுமாறு எழுத்து மூலம் சபாநாயகரைக் கேட்டுக்கொள்ளலாம். அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப் பெற்றதன் பேரில் பாராளுமன்றத்திற்கு அறிவித்த பின்னர் சபாநாயகர் அத்தகைய உறுப்பினரை அத்தகைய குழுவிலிருந்து நீக்க வேண்டும்.

(ஊ) (i) ஒவ்வொரு நிலையயிற் குழுவும் அதன் முதலாவது கூட்டத்தின் போது அல்லது அதன் தவிசாளர் பதவி வெற்றிதடமான பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டத்தின் போது அந்நிலையியற் குழுவின் தவிசாளரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(ii) நிலையியற் குழுவொன்றின் தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுவதற்கு அமைச்சர் ஒருவருக்கோ அல்லது பிரதி அமைச்சர் ஒருவருக்கோ அங்கீகாரம் இல்லை.

(எ) குழுவினது மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு அங்கத்தவர் எவராவது சமுகமளிக்காமலிருந்தால் அவர் அக்குழுவின் உறுப்புரிமையை இழந்தவராகக் கருதப்படுவார்.

9. மேற்பார்வை நிலையியற்குழு ஒவ்வொன்றும் அக்குழுவினைப் பரிசீலனை செய்தல் மற்றும் அக்குழுவிற்கு அறிக்கையிடல் போன்ற விடயங்கள் அவசியமாகும் போது தனது சொந்த உறுப்பினர்களைக் கொண்டு உப குழுக்களை நியமித்தல் அத்தியாவசியமெனக் கருதுகிறது.

10. ஏதாவதொரு குறித்த விடயத்தில் அறிக்கையிடலுக்கான காலநீடிப்பு பாராளுமன்றத் தினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, குறிப்புரை கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதங்கள் காலாவதியாகும் வரை மேற்பார்வை நிலையியற் குழுவிற்கு குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பாராளுமன்றத்தினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லை காலாவதியாகிய பின்பு மாத்திரமே இவ்விடயம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

11. ஏதாவதொரு சட்டமூலம் அல்லது பொது முக்கியத்துவம் சம்பந்தப்பட்ட வேறு ஏதாவது விடயம் சார்பாக அச்சட்ட மூலத்தினால் பாதிக்கப்பட்ட சகல தரப்புகள் அல்லது அக்கறையுள்ள ஏதாவது தரப்புகள் அல்லது அனுபவசாலிகள் ஆகியோரிடமிருந்து சாட்சியங்களை மேற்பார்வை நிலையியற்குழு ஒவ்வொன்றும் அழைக்கலாம்.

12. (அ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு சட்டமூலத்தை அல்லது அரசியலமைப்பிற்கான ஒரு திருத்தத்தைத் தவிர்ந்த சட்டத்தை ஆக்குவதற்கு மேற்பார்வை நிலையியற் குழுவொன்று விதப்புரை செய்யுமிடத்து, அத்தகைய நோக்கத்திற்காக அவ்வறிக்கையின் குறித்துரைக்கப்படும் குழுவின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரைக்கு உட்பட்டு, அறிவித்தலின் பின்னர் அச்சட்டமூலம் பாராளுமன்றத்தின் கட்டளை ஒன்று இன்றியே பாராளுமன்றத்தில் முதல் மதிப்பீடு செய்வதற்கான பிரரேரணை ஒன்றை பிரேரிக்கலாம். அச்சட்டமூலத்தின் பிரதிகள் அப்பிரேரணையுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அப்பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு வாரங்களுக்குள் சபாநாயகர் அத்தகைய பிரேரணையை வாக்கெடுப்பிற்காக பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும். எனினும், இவ் ஆறுவார காலம் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு காலத்துள் அல்லது அதன் குழுநிலையில் அல்லது அதன் மூன்றாவது மதிப்பீட்டின்போது வருமாயின், ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான பரிசீலனை நிறைவுற்றதன் பின்னர் பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும். அத்தகைய பிரேரணை ஒன்றைப் பாராளுமன்றம் அங்கீகரித்ததன் பின்னர் அச்சட்டமூலம் முதலாம் முறை வாசிக்கப்படுதல் என்பதோடு அச்சிடப்படுவதற்கும் கட்டளையிடவேண்டும்.

எனினும், அத்தகைய சட்டமூலம் மேற்பார்வை நிலையியற் குழுவின் மொத்த உறுப்பினர்களுள் 2/3 பங்கினரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதோடு, பெயர்களுடன் அவ்வாறு பதியப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) சட்டமூலம் முதல் முறை மதிப்பிடப்பட்டு, அச்சிடப்படுவதற்கு கட்டளையிடப்பட்ட பின்னர், சபாநாயகர் அத்தகைய சட்டமூலத்தை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரை அதன்மீது மேலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படமாட்டாது.

(இ) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்த பின்னர் அல்லது அச்சட்டமூலம் அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு மாதங்கள் முடிவுற்றதன் பின்னர் அச்சட்டமூலம் இரண்டாம் வாசிப்பிற்காக இடப்படும்.

13. (அ) ஒவ்வொரு நிலையியற் குழுவும் ஆட்களையும், பத்திரங்களையும், பதிவுகளையும் கேட்டுப்பெறுவதற்கு அதிகாரம் உடையதாக இருப்பதோடு, தம்முன் எடுக்கப்பட்ட சான்றுகள் பற்றிய அறிக்கைகளோடு தமது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானிப்புகள் ஆகிய அடங்கிய அறிக்கைகளைச் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

(ஆ) நிலையியற் குழுவின் எவரேனும் உறுப்பினரொருவரின் மாற்றுக்கருத்துகள் குழுவின் ஏதாவது அறிக்கையுடன் இணைக்கப்படலாம்.

14. (அ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டம் இயற்றுதலுக்கு நிலையியற் குழுவின் அறிக்கை எப்போதாவது விதப்புரை செய்யுமாயின், அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 3 மாத காலப்பகுதியினுள் அமைச்சரவை தனது அபிப்பிராயங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) ஒரு நிலையியற் குழுவின் அறிக்கை சட்டவாக்கம் சாராத அறிக்கையாக இருக்குமிடத்து, அவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2 மாத காலப்பகுதியினுள் அமைச்சரவை தனது அபிப்பிராயங்களை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்தினால் பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளப்படலாகாது.

15. யாராவது முகவர், சங்கம், அதிகாரி அல்லது நபர் ஏதாவது சட்டத்தின் கீழ் நம்பிக்கை அல்லது இரகசியத்தன்மை ஆகியவற்றைப் பேணுவதற்கு தேவைப்படுத்தப் பட்டிருக்கும் பொழுது சம்பந்தப்பட்ட நிலையியற் குழு அத்தகைய சட்டத்திற்கமைய செயற்பட வேண்டும்.

16. (அ) அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின் கீழ் உருவாக்கப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான ஏதாவது ஒழுங்கு விதிகள் சட்டம் மற்றும் மகளிர் அலுவல்கள் தொடர்பான நிலையியற் குழுவிற்கு அறிக்கையிடுவதற்காக ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். வேறு குழுவொன்றின் நியாயாதிக்கத்தின் கீழ் வருகின்ற திட்டவட்டமான விடயங்களை ஒழுங்கு விதியொன்றின் சுருக்கப்பெயர் குறிப்பிடுகின்ற பொழுது, 4 ( இ) ( ii ) பந்தியின் பிரகாரம் அத்தகைய ஒழுங்கு விதிகளை அத்தகைய நிலையியற் குழுவிற்கு சபாநாயகர் ஆற்றுப்படுத்த வேண்டும்.

(ஆ) உப பந்தி (அ) வின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு 7 ஆம் பந்தி ஏற்புடையதாகாது.

17. மேற்பார்வை செய்வதற்கான ஏதாவது நிலையியற் குழு, சபாநாயகரிடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏனைய நிலையியற் குழுக்களுடன் கலந்துரையாடலாம்.

18. ஏதாவது ஒதுக்கீடுகளின் மாற்றம் மற்றும் பாவிக்கப்படாத மிகுதிகள் தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர், வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர், சம்பந்தப்பட்ட அமைச்சரின் செயலாளர் ஆகியோர் உடனடியாக பொது நிதி குழுவிற்கு அறிவிக்க வேண்டும்.

19. நியாயாதிக்கம் எனப்படுவது சட்ட மேற்பார்வை நியாயாதிக்கம் எனப் பொருள்படும் என்பதோடு துணைச்சட்டவாக்கங்கள் மீதான மேற்பார்வையையும் அது உள்ளடக்கும்.

    ஏதாவது ஒதுக்கீடுகளின் மாற்றம் மற்றும் பாவிக்கப்படாத மிகுதிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர், உரிய மேற்பார்வைக் குழுவிற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

20. 8 ( அ) மற்றும் ஊ (ii) ஆம் பந்திகளின், அரசாங்க கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றிற்கு ஏற்புடையனவாயிருத்தல் வேண்டும்.

பா.106/ ’10

8.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்

கௌரவ சீ.ஏ.சூரியாரச்சி

கௌரவ(திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ ஹுனைஸ் பாரூக்

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ வை.ஜீ. பத்மசிறி

கௌரவ சாந்த பண்டார

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஆர். துமிந்த சில்வா

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ உதித் லொக்குபண்டார

கௌரவ ரோஹன திசாநாயக்க

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாஸ

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ திளும் அமுனுகம

கௌரவ விஜித பேருகொட

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா

கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ ஜானக பண்டார

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ வி.கே. இந்திக

கௌரவ நெரன்ஜன் விக்கிரமசிங்க

கௌரவ பெருமாள் ராஜதுரை
கௌரவ லலித் திசாநாயக்க
கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்
கௌரவ ஏ.பி. ஜகத் புஷ்பகுமார
கௌரவ ஹேமால் குணசேகர
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ விஜய தஹநாயக்க
கௌரவ தாராநாத் பஸ்நாயக்க
கௌரவ துலீப் விஜேசேகர
கௌரவ ரோஹித அபேகுணவர்தன
கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ டிலான் பெரேரா
கௌரவ எஸ்.எம். சந்திரசேன
கௌரவ விதுற விக்கிரமநாயக்க
கௌரவ குணரத்ன வீரகோன்
கௌரவ மஹிந்த சமரசிங்ஹ
கௌரவ அதாவுத செனெவிரத்ன
கௌரவ சந்திரசிறி கஜதீர
கௌரவ சாலிந்த திசாநாயக்க
கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க
கௌரவ நிமல் விஜேசிங்க
கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன
கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க
கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும
கௌரவ திஸ்ஸ கரல்லியத்தே
கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க
கௌரவ பீலிக்ஸ் பெரேரா
கௌரவ விநாயகமூரத்தி முரளிதரன்
கௌரவ நியோமால் பெரேரா
கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன
கௌரவ எச்.ஆர். மித்ரபால
கௌரவ ஜயரத்ன ஹேரத்
கௌரவ (திருமதி) பவித்ரா தேவி வன்னிஆரச்சி
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேகா
கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண
கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு

கௌரவ விக்டர் அந்தனீ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ தயாசிறித திசேரா

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ சனத் ஜயசூரிய

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ தினேஷ் குணவர்தன,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பை மீறிச் செயல்பட்டுள்ளமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரி குழு,—

இவ்வுயர் சபையின் பாராளுமன்ற உறுப்பனரான கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் 2010 நவெம்பர் மாதம் 29 ஆம் திகதியும் அதற்கு முந்திய நாட்களிலும் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்களினால் இலண்டன் நகரில் இலங்கை அரசு மற்றும் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட கூட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலந்துரையாலடல்களில் நேரடியாக அத்துடன் / அல்லது மறைமுகமாக கலந்து கொண்டுள்ளதாகவும், அவ்வாறான கலந்துரையாடல்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அத்துடன் அல்லது பக்க பலமூட்டியும் அனுசரணை வழங்கியுமுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாலும்,

குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வதுடன் தொடர்புபட்ட அடிப்படை கலந்துரையாடல்கள் மற்றும் ஆர்வமூட்டும் கூட்டங்களுக்கும் அதனுடன் தொடர்புபட்ட அறிவூட்டல் நிகழ்வுகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் நேரடியாக கலந்து கொண்டுள்ளதாக அறியவந்துள்ளதாலும்,

இதற்கு முன்னரும் பராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடனும் அதன் ஆதரவாளர்களுடனும் பல்வேறு வகையில் தொடர்புகளை கொண்டிருந்ததாக தகவல்கள் வெளியாகி இருப்பதனாலும்,

இலண்டன் மற்றும் ஐரோப்பாவின் ஏனைய பிரதான நகரங்களைச் சேர்ந்த எல்.ரீ.ரீ.ஈ. செயற்பாட்டாளர்களுடன் மற்றும் அல்லது எல்.ரீ.ரீ.ஈ. ஆதரவாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் பேணி வந்துள்ளதாகவும், பேணி வருவதாகவும் தகவல்கள் வெளியாகி இருப்பதாலும்,

மேற்சொன்ன செயற்பாடுகளில் ஒன்றின் மூலமாகவோ அல்லது பலவற்றின் மூலமாகவோ பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் இலங்கை அரசியலமைப்பின் 157 (அ) பிரிவையும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் மற்றும் சத்தியப் பிரமாணத்தையும் தெளிவாகவே மீறியுள்ளதாகத் தெரிவதனாலும்,

மேற்சொன்ன விடயங்கள் தொடர்பாக மற்றும் மேற்சொன்ன விடயங்களுக்கு ஏற்புடையதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்களின் செயற்பாடு தொடர்பாக ஆராய்ந்து இவ்வுயரிய சபைக்கு அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற தெரி குழுவொன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

2. மேலும்,

(அ) மேற்படி குழுவிற்கு அங்கத்தவர்களை பெயர்குறித்து நியமித்தலும் தவிசாளரை நியமித்தலும் கௌரவ சபாநாயகர் அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்,

(ஆ) மேற்படி குழு தனது கூட்ட, நடப்பெண்ணை தீர்மானிப்பதற்கும்,

(இ) தேவையான ஆட்களை அழைக்கவும் தேவையான பத்திரங்களை தருவிப்பதற்கும்,

(ஈ) உறுதிமொழி அளித்த நிலையில் சாட்சியாளர்களை விசாரிக்கவும் குழு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

3. காலத்துக்குக் காலம் அறிக்கையிடுவதற்கும், பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்ட போதிலும் கூட்டங்களை நடாத்திச் செல்லவும் மேற்படி குழு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

பா. 107/ '10

9.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ திஸ்ஸ அத்தனாயக்க

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ ஹரீன் பர்னாந்து,— இங்கிலாந்தின் "ஹீத்ரோ" விமான நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் இந்த கௌரவ சபையின் எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டிருந்தாரா என்பதை விசாரித்து அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

2010 திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரும், அரசாங்க கட்சியின் முதற்கோலாசானுமான கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள் பாரளுமன்றத்தின் முன்னிலையில்;

"இந்த பாராளுமன்றத்தின் அரசியலமைப்பின் பிரகாரம் சத்தியப் பிரமாணம் செய்த உறுப்பினர் ஒருவர் தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்போடு சட்டவிரோத குழுக்களுடன் இணைந்து அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வருகை தரும் நேரத்தில் இங்கிலாந்திலுள்ள விமான நிலையமொன்றுக்குச் சென்று எமது நாட்டுக்கும், அதேபோன்று தமது சத்தியப் பிரமாணத்திற்கும் எதிராக செயற்பட்டிருப்பின், அந்த உறுப்பினரை இச்சபை உடனடியாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்" என அறிவித்திருப்பதாலும்;

கௌரவ தினேஷ் குணவர்தன அமைச்சரால் எழுப்பப்பட்ட விடயங்கள் இச்சபையின் கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதனாலும்;

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம்;

(அ) அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பின்னணிக்கு காரணியான விடயங்களையும்;

(ஆ) இங்கிலாந்தின் "ஹீத்ரோ" விமான நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் இந்த கௌரவ சபையின் எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டிருந்தாரா என்பதை விசாரித்து அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற தெரிவுழுவொன்றை நியமிக்குமாறு பிரேரிக்கின்றோம்.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அதன் அறிக்கையை அதன் முதலாவது கூட்டத்தில் இருந்து மூன்று மாத (03) காலப்பகுதிக்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படுகின்ற அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்குச் சமப்பித்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவின் முன் தோற்றுமாறு எவரையும் கட்டளையிட்டழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைச் சமாப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடவும், மேலுள்ள விடயத்தைப் பூரணமாக ஆராய்வதற்குத் தேவையானதெனக் கருதும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மொழியிலான அனைத்துச் சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளவும் பொறுப்பேற்கவும் அதிகாரமுடையதாகவிருத்தல் வேண்டும்.

(இ) குழுவுக்குத் துணைபுரியவென உரிய துறைகளில் சிறப்புத் தகுதிகள் உடையோர் மற்றும் நிபுணர்கள் ஆகியோரின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

பா.121/ '11

10.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ ஹரின் பர்னாந்து

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஏ.டி.சம்பிக பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா மீது நம்பிக்கையின்மை,—

2011 ஏப்ரல் 01 ஆம் திகதி உள்ளூராட்சி அதிகார சபைகளின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கவிருப்பதால், 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறும் என உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். அதாவுல்லா 2011 ஜனவரி 04 ஆம் திகதி பின்வருமாறு கூறி சபைக்கு உறுதியளித்த தனாலும்:

"අද වෙලා තියෙන්නෙ මේකයි. 2011 අප්‍රේල් 01 වැනිදා අපි පළාත් පාලන ආයතනවල අලුත් සභා වාරය කැඳවන්න ඕනෑ. ඒකට ඇත්තටම මාර්තු මාසයේ ඡන්දය තියන්න වෙනවා."

கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர – கோட்டே மற்றும் தெஹிவளை - கல்கிசை மாநகர சபைகள் மற்றும் கொலன்னாவ நகர சபை ஆகியவற்றிற்கான தேர்தல்கள் தற்போது பின்போடப்பட்டுள்ளதுடன் மேலும் சில மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் பின்போடப்படவுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளதாலும்; அத்துடன்

அமைச்சர் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பான கூற்றை வெளியிட்டதன் மூலம் சபையைத் தவறாக வழிநடத்தியுள்ளதனாலும்;

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சராகத் தொடர்ந்தும் தனது பணிகளை நிறைவேற்றுவதற்கான அமைச்சரின் ஆற்றலில் இந்த சபை நம்பிக்கை இழந்துள்ள தெனவும் அவர் அமைச்சரவையில் தொடர்ந்து பதவி வகிப்பதற்கு தகுதியற்ற, பொருத்தமற்ற ஒருவர் எனவும் இந்தச் சபை தீர்மானிக்கின்றது.

11.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— குமரன் பத்மநாதன் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை மற்றும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது எந்தச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் என்பது பற்றியும் மற்ற விடயங்கள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கைசெய்வதற்கான பாராளுமன்ற தெரிகுழு,—

இலங்கை அரசாங்கத்தின் 2009, ஆகஸ்ட் 7ஆம் திகதிய அறிவித்தலின் பிரகாரம், செல்வராசா பத்மநாதன் என்றும் குமரன் பத்மநாதன் என்றும் அழைக்கப்படுபவரும் அதைவிடப் பொதுவாக "கே.பி" என அழைக்கப்படுபவருமான சண்முகம் குமரன் தர்மலிங்கம் தற்போது ஓராண்டுக்கும் மேலாக அதன் பாதுகாப்பில் இருப்பதனாலும்,

ஆயுதக் கடத்தல் மற்றும் குற்றவியல் சதித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக சர்வதேச பொலிசாரின் மிகவும் தேடப்படுவோர் பட்டியலில் "கே.பி" இடம்பெறுவதனாலும்,

1991இல் இடம்பெற்ற முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாகவும் பயங்கரவாதச் சட்டம் மற்றும் இந்திய வெடிபொருட்கள் சட்டம் ஆகியவற்றை மீறியமைக்காகவும் இந்திய சட்ட வினைப்படுத்துகை முகவராண்மைகளினால் அவர் தேடப்படுவதனாலும்,

இலங்கையில் ஸ்ரீ மஹாபோதி மற்றும் புத்த பெருமானின் புனிதத் தந்தம் வைக்கப்பட்டுள்ள கோயில் ஆகியவைமீதான தாக்குதல்கள் உள்ளிட்ட பல பயங்கரவாதத் தாக்குதல்களில் அவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டுள்ளதாலும்,

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் (த.ஈ.வி.பு) ஆயுதக் கொள்வனவாளராக அவர் இருந்துள்ளதாலும்,

த.ஈ.வி.பு.களின் ஆயுதக் கொள்வனவு, வழங்கல்கள் மற்றும் பணம் தூய்தாக்கல் தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருந்த த.ஈ.வி.பு.களின் அலுவலகங்களின் உலகளாவிய வலையமைப்பொன்றை அவர் கொண்டுநடத்தியதாலும்,

த.ஈ.வி.பு.களுக்கான ஆயுதங்களையும் வெடிபொருட்களயும் ஏற்றிச்செல்வதில் ஈடுபட்டிருந்த கப்பல் கம்பனி ஒன்றை அவர் இயக்கியதாக அறியவருவதாலும்,

இலங்கையில் நடைபெற்ற பல வங்கிக் கொள்ளைகளின் சூத்திரதாரியாக அவர் விளங்கியதாகக் கூறப்படுவதாலும்,

த.ஈ.வி.பு.களுக்கு பெருந்தொகையான ஆயுதங்களை வழங்குவதில் அவர் ஈடுபட்டிருந்ததாலும்,

த.ஈ.வி.பு.களுக்குச் சொந்தமான 19 கப்பல்கள் மற்றும் தங்கம் உள்ளிட்ட பெருந்தொகையான சொத்துகளை அவர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகக் கூறப்படுவதனாலும்,

த.ஈ.வி.பு.களினால் 2009, யூலை 21ஆம் திகதி வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை அவரை த.ஈ.வி.பு.களின் தலைவராகப் பிரகடனம் செய்தமையாலும்,

த.ஈ.வி.பு. இயக்கம் அப்பாவி மக்களைக் கொன்று கொடுமைகள் இழைத்துள்ளதாக ஐ.நா. அறிக்கை கூறுவதாலும்,

த.ஈ.வி.பு.களின் செயற்பாடுகளுக்கு நிதியழிப்பதற்கு சர்வதேச ரீதியில் பணம் சேகரித்தவர் “கே.பி” என்பவரே என அரசாங்கம் கூறுவதனாலும்,

பின்வருவன தொடர்பாக விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற தெரிகுழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அ) எந்தச் சட்ட ஏற்பாட்டின் கீழ் கே.பி. தடுத்து வைக்கப்பட்டுள்ளார்;

(ஆ) கே.பி. க்கு எதிராக குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதா, அவ்வாறாயின் —

(i) எச் சட்டத்தின் கீழ் அவர் குற்றம் சாட்டப்படுவார்,

(ii) குற்றப் பத்திரிகையில் என்னென்ன குற்றங்கள் உள்ளடக்கப்படும்,

(iii) அவருக்கு எதிராக எப்போது நீதிமன்றத்தில் குற்றங்களை சாட்டுவதற்கு உத்தேசிக்கப்படுகிறது, அத்துடன்

(iv) எந்த நீதிமன்றத்தில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படும்;

(இ) அவரை நாட்டை விட்டு அனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா, அவ்வாறாயின் எந்த நாடுகள் அவ்வாறான வேண்டுகோளை விடுத்துள்ளன, அவ்வாறு அவரை நாட்டை விட்டு வெளியேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(ஈ) கே.பி. வசமிருந்த குறிப்பாக தங்கம், கப்பல்கள் உள்ளிட்ட எல்.ரீ.ரீ.ஈ. யின் சொத்துக்கள் எங்கேயுள்ளன. மற்றும் அவற்றின் கதி என்ன;

(உ) நாட்டின் சட்டங்களின் கீழ் கே.பி.க்கு எதிராக வழக்குத் தொடராமல் அவரை வைத்திருப்பதில் எந்த உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களின் தனது கடமையை புரியாது வாளாவிருக்க தேசத்துரோக நடவடிக்கைக்காக குற்றவாளிகளா உள்ளனரா என்ற விடயத்தையும் அத்தெரிகுழு பரிசீலிக்க வேண்டும்.

2\. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல.95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது, —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.135/'11

12.

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ (திருமதி) அனோமா கமகே

கௌரவ ஹரின் பர்னாந்து

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ தயாசிறி ஜயசேகர,— ஹெஜின் உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் நட்டம் மற்றும் அந்த உடன்படிக்கை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைத்துவத்தின் ஒட்டுமொத்த இயலாமை காரணமாக 160 மில்லியன் அமெரிக்க டொலர் சம்பந்தப்பட்ட தீர்ப்பொன்று அதற்கெதிராக வழங்கப்பட்டுள்ளதனாலும்,

வழங்கப்படவுள்ள மேலும் இரண்டு தீர்ப்புகள் அவ்வாறே கூட்டுத்தாபனத்துக்கு எதிராக அளிக்கப்படின், கூட்டுத்தாபனம் மேலும் முறையே 60 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்க நேரிடும் என்பதாலும்,

முறைகேடான வகையில் செய்துகொள்ளப்பட்ட இந்த ஹெஜின் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டது, திறமையின்மையினாலா அல்லது நேர்மையீனத்தினாலா என்பது புரிந்துகொள்ள முடியாதிருப்பதனாலும்,

(அ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முற்றிலும் பிரதிகூலமான அத்தகைய ஹெஜின் உடன்படிக்கைகள் எவ்வாறு செய்துகொள்ளப்பட்டன என்பதையும்;

(ஆ) இந்த உடன்படிக்கைகளுக்குப் பொறுப்பான கூட்டுத்தாபனத்தில் உள்ள அலுவலர்கள் யார் என்பதையும்;

(இ) இந்த ஹெஜின் உடன்படிக்கைகளின் விளைவாக கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ஈ) எதிர்காலத்தில் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(உ) இந்த ஹெஜின் உடன்படிக்கைக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும்; மற்றும்

(ஊ) பரிசீலனைக்குட்பட்ட இந்த விடயங்கள் மீது தாக்கத்தைக் கொண்டிருக்குமெனவும் இச்சூழ்நிலைகளில் பொருத்தமானதெனவும் குழு கருதும் வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பாகவும்;

ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கு பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல. 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.136/'11

13.

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ மொஹான்லால் கிரேரு

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ வசந்த அலுவிஹாரே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தரக் குறைவான பெற்றோலை இறக்குமதி செய்தது எவ்வாறாகும் என்ற பிரச்சினையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தையும் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

அண்மைக் காலத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகமானது திருப்தியற்றதாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளமையினாலும்,

கூட்டுத்தாபனம் தரம் குறைந்த பெற்றோலினை இறக்குமதி செய்துள்ளமை தற்போது தெரிய வந்துள்ளமையினாலும்,

இத்தரம் குறைந்த பெற்றோலானது ஆயிரக்கனக்கான வாகனங்களைப் பழுதடையச் செய்திருப்பதுடன் சிலவற்றினை பழுது பார்க்க முடியாத அளவிற்குச் சேதப்படுத்தியிருப்பதனாலும்,

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள எரிபொருள் பம்பிகளுக்கு இதனால் சேதம் ஏற்பட்டுள்ளமையினாலும்,

கூட்டுத்தாபனத்தின் இச் செயற்பாடானது சொல்லொணா நிதி இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளதனாலும்,

குற்றத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரபீடம் ஏற்கனவே ஒரு பலிக்கடாவினைக் கண்டுபிடித்துள்ளதனாலும்,

தரக் குறைவான பெற்றோல் உண்மையிலேயே இறக்குமதி செய்யப்பட்டது என்பதை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளதனாலும்,

இச்சம்பவம் தொடர்பாக அரசாங்கம் முன்னுக்குப் பின் முரணான பல கூற்றுக்களை வழங்கியுள்ளதனாலும்,

(அ) இப்பெற்றோல் இருப்பிற்காகக் கட்டளை பிறப்பிக்கையில் ஏன் கேள்விமனுக்கோரல் செயன் முறைகள் பின்பற்றப்படவில்லை என்பதையும்;

(ஆ) உண்மையிலேயே தரக் குறைவான பெற்றோல் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

(இ) எந்த நாட்டிலிருந்து அத்தகைய இறக்குமதிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ஈ) இறக்குமதிகளின் மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(உ) இவ் இறக்குமதிகளின் விளைவாகக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ஊ) இவ் இறக்குமதிகளைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை ஏன் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(எ) கிடைக்கப்பெற்ற இருப்புகள் தரம் குறைந்ததாகக காணப்பட்டிருப்பின், அவற்றை நிராகரிப்பதற்கு ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(ஏ) இறக்குமதிசெய்யப்பட்ட இருப்புகள் தரம் குறைந்ததாக இருப்பது தெரியவந்ததன் பின்னரும் அவற்றை நாட்டிலுள்ள பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுப்பியது ஏன் என்பதையும்;

(ஐ) இறக்குமதிசெய்யப்பட்ட இருப்புகள் தரம் குறைந்ததாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் கொடுப்பனவுகள் ஏன் செலுத்தப்பட்டன என்பதையும்;

(ஒ) பெற்றோலுக்கான தட்டுப்பாடு ஏற்பட இருப்பது பற்றிப் பொதுமக்களுக்கு ஏன் அறிவிக்கப்படவில்லை என்பதையும்;

(ஓ) இவ் இறக்குமதிகளுக்குப் பொறுப்பாகவுள்ள நபர்கள் யார் என்பதையும்;

(ஔ) எதிர்காலத்தில் அந் நிகழ்வுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(க) இவ் இறக்குமதிகளுக்குப் பொறுப்பாகவுள்ளவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை யாது என்பதையும்;

(ச) பரிசீலனையின்கீழ் உள்ள இவ்விடயங்கள்மீது தாக்கங்களை கொண்டிருப்பவையெனவும் அத்தகைய சூழ்நிலையில் பொருத்தமானதெனவும் குழு கருதும் வேறு யாதேனும் விடயம் தொடர்பாகவும்;

ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கு பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2 (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல. 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3 அக்குழுவானது,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4 குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா. 137/ '11

14.

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த
கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க
கௌரவ ரஊப் ஹகீம்
கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண
கௌரவ டக்ளஸ் தேவானந்தா
கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ மைத்திரிபால சிறிசேன
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ பெஸில் ரோஹண ராஜபக்ஷ
கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்
கௌரவ டியூ குணசேகர
கௌரவ முத்து சிவலிங்கம்
கௌரவ பெருமாள் ராஜதுரை
கௌரவ ராஜீவ விஜேசிங்க

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கை மக்களை ஒரே தேசத்தின் மக்களாக வலுவூட்டுவதற்கான அரசியல் மற்றும் அரசியலமைப்பு ரீதியில் நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும் அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்றத் தெரிகுழு.

தேசத்தினதும் அதன் பிரஜைகளினதும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக ஒரு தேசமாக ஒன்றிணைவதற்கும் பணிபுரிவதற்கும் இலங்கை மக்களுக்கு உன்னதமான வாய்ப்பொன்று உருவாகியுள்ளதாலும்;

இதற்காக இலங்கை மக்களின் ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், அவர்களை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் இது பொருத்தமான தருணம் என்பதனாலும்;

மேலே சொல்லப்பட்ட விடயங்களை இயலச் செய்வதற்கான நடவடிக்கைகளின் தன்மை, விடயப் பரப்புகள் ஆகியவற்றை நிர்ணயிப்பதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிகுழுவொன்று சாலப்பொருத்தமானது என்பனாலும்;

(அ) இலங்கை மக்களின் ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கும்,

(ஆ) ஒரே தேசத்தின் மக்களாக அவர்களை மேலும் வலுவூட்டுவதற்கும்,

(இ) அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களை இயலச் செய்வதற்கும்,

இலங்கை மக்களுக்குப் பொருத்தமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வொன்றுக்கான அரசியல் மற்றும் அரசியலமைப்பு வழிமுறைகளை இந்த கௌரவ சபைக்கு 06 மாதங்களுக்குள் விதந்துரைப்பதற்கு பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

02 (அ) மேற்படி தெரிகுழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறாயிருப்பினும், அக்குழு முப்பத்தொன்றுக்கு (31) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03 மேற்படி பாராளுமன்றத் தெரிகுழுவானது,

(அ) அதன் கூட்டநடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) அவசியமெனக் கருதக்கூடிய ஆட்களையும் ஆவணங்களையும் வரவழைப்பதற்கும்;

(இ) அவ்வாறு அழைக்கப்படுகின்ற எவரேனுமொருவரை சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்வதற்கும்;

(ஈ) காலத்திற்குக் காலம் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தனது செயற்பாடுகளைத் தடையின்றி தொடர்ந்து நடாத்துவதற்கும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும்

இப்பாராளுமன்ற தெரிகுழு அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

15.

கௌரவ மைத்திரிப்பால சிறிசேன

கௌரவ நிர்மல கொத்தலாவல

கௌரவ முஹமட் அஸ்லம்

கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க

கௌரவ டபிள்யு. பீ. ஏக்கநாயக்க

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ ருவன் ரணதுங்க

கௌரவ தராநாத் பஸ்நாயக்க

கௌரவ விநாயகமூர்த்தி முரளீதரன்

கௌரவ பழனி திகம்பரம்

கௌரவ சரண குணவர்தன

கௌரவ ஜகத் பாலசூரிய

கௌரவ ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கௌரவ துலிப் விஜேசேகர

கௌரவ வை.ஜீ. பத்மசிறி

கௌரவ சஜித் த வாஸ் குணவர்தன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ மனுஷ நாணயக்கார

கௌரவ (திருமதி) பவித்ரா தேவி வன்னியாராச்சி

கௌரவ உதித் லொகுபண்டார

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ ஏ.எச்.எம். பௌசி

கௌரவ எச்.எம்.எம். ஹரிஸ்

கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா

கௌரவ அசல ஜாகொடகே

கௌரவ மொஹான் பிரியதர்ஷன  த சில்வா

கௌரவ நிஷாந்த முத்துஹெட்டிகமகே

கௌரவ (டாக்டர்) ரோஹண புஷ்பகுமார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ டீ. ரஞ்சித் த சொய்சா

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ லசந்த அழகியவன்ன

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ திஸ்ஸ கரலியத்த

கௌரவ ஹேமால் குணசேகர

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ கனக ஹேரத்

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ ரொஷான் ரணசிங்க

கௌரவ கீதாஞ்சன குணவர்தன

கௌரவ ரெஜினோல்ட் குரே

கௌரவ வீ. எஸ். ராதாகிருஷ்ணன்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ விக்டர் அன்ரனி

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க

கௌரவ சிறிபால கம்லத்

கௌரவ எச்.ஆர். மித்ரபால

கௌரவ ரோஹண திஸாநாயக்க

கௌரவ (திருமதி) உபேக்ஷா சுவர்ணமாலி

கௌரவ (திருமதி) மாலனி பொன்சேகா

கௌரவ ஜானக்க வக்கும்புர

கௌரவ விஜித பேருகொட

கௌரவ காமினி லொகுகே

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ பியசேன கமகே

கௌரவ குமார வெல்கம

கௌரவ காமினி விஜித் விஜிதமுனி த சொய்சா

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ ரிசாட் பதியுதீன்

கௌரவ ஜே.ஆர்.பீ. சூரியப் பெரும

கௌரவ டபிள்யு.டீ.ஜே. செனவிரத்ன

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த

கௌரவ ரஊப் ஹக்கீம்

கௌரவ மில்ரோய் பர்னாந்து

கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா

கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா

கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாச

கௌரவ பீலிக்ஸ் பெரேரா

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ எம்.பீ. பாறூக்

கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு சரத் என் சில்வாவுக்கு எதிராக அதிகாரத் துஷ்ப்பிரயோகம் பற்றியும், துர்நடத்தை மற்றும்/அல்லது ஒழுக்கக்கேடு பற்றியும் விசாரித்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

மேற்படி குற்றச்சாட்டுகளுக்கிணங்க அவர் நீதிமன்றத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்கி யுள்ளாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளதாலும்,

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதிலும் பேணிவருவதிலும் அவர் தவறியுள்ளாரென்பதாலும்,

பின்வரும் விடயங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

(அ) வெல்லவாய, முன்னாள் நீதிவான் திரு. ஜனக பண்டாரவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்கள் மற்றும் அவரது இராஜினாமாவை சமர்ப்பிக்க அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதா என்பதும்;

(ஆ) கொழும்பு, முன்னாள் மேலதிக நீதவான் திரு. ஹிரான் ஏக்கநாயக்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை வன்மமாக இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(இ) முன்னாள், நீதவான் திரு. சுனில் லோரன்ஸ் த கொஸ்தாவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்

(ஈ) மாத்தறை, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. அனுர பண்டாரவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(உ) மாளிகாகந்த, முன்னாள் நீதவான் திரு. டி.எம். சிறிவர்தனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஊ) நீர்கொழும்பு, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. டி.எம். சிறிவர்தனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(எ) நுவரெலியா, முன்னாள் மாவட்ட நீதவான் திரு. பிரபாத் த சில்வாவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஏ) கெப்பித்திகொல்லேவ, முன்னாள் நீதவான் திரு. டி.எம்.ரி.பீ. திசாநாயக்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஐ) கொழும்பு, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. ஹெரல்ட் விஜேசிறி லியனகேயின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஒ) மொறவக்க, முன்னாள் நீதவான் திரு. கே.டி.கே. த ஆப்றுாவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஓ) பலப்பிட்டிய, முன்னாள் நீதவான் திரு. வை.எல். தர்மசேனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஔ) கண்டி, முன்னாள் மேலதிக நீதவான் திரு. நந்தன வீரசிங்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(க) கந்தளாய், முன்னாள் நீதவான் திரு. ஏ.எம்.டி.எஸ். திக்கபிட்டியவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ங) எல்பிட்டிய, முன்னாள் மாவட்ட நீதவான் திரு. ஜீ.டி. குலதிலகவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ச) மேலே குறிப்பிட்ட தருணங்களுக்கு மேலதிகமாக நீதிச் சேவை அலுவலர்களின் சேவைகள் வன்மமான முறையில் முடிவுறுத்தப்பட்ட தருணங்கள்;

(ஞ) கொழும்பு 7, விஜேவர்தன மாவத்தை, 129 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ இல்லத்தில் பேணிவரப்பட்ட நீதியரசர்களின் நிறுவனத்தின் பொறுப்பாளர் எனும் வகையில் நீதிமன்றத்தின் முன்னிலையில் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த ரோஹணகுமார என்பவருக்கு மாண்புமிகு சரத் என். சில்வாவினால் நியமனமொன்று வழங்கப்பட்டதா என்பதும்;

(ட) மாண்புமிகு சரத் என். சில்வா கௌரவ பணிப்பாளரொருவராக சேவையாற்றுகின்ற பௌத்த ஒலிபரப்புச் சேவையை தாபிக்க ஏதுவான விடயங்கள் மற்றும் த புடிஸ்ற் (The Buddhist TV Channel) தொலைக்காட்சி அலைவரிசையை ஆரம்பிக்க 65 மில்லியன் ரூபா கொடையினை வழங்கிய முகுந்தன் கானகீ மனுதாரராக தோற்றிய சி.பீ.என். செய்மதி (C.B.N. Sat) வழக்கின் தீர்ப்புடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்;

(ண) பாராளுமன்றத்தை நவீனமயமாக்கல், சனநாயகம் மற்றும் அபிவிருத்தி பற்றிய உலக வங்கி / ஐ.நா. அ. வே. (World Bank / UNDP) உதவிக் கருத்திட்டத்தில் மாண்புமிகு சரத் என். சில்வாவினால் ஈடேற்றப்பட்ட கடமைகளுடன் தொடர்புடைய விடயங்கள்;

(த) பிரதம நீதியரசர் எனும் வகையில் மாண்புமிகு சரத் என். சில்வா சேவையாற்றிய காலப்பகுதிக்குள்ளே அவரது வன்மமான செயல்கள் காரணமாக வேறு ஆட்கள் எவருக்கேனும் இடர்கள் ஏற்பட்டுள்ளதா என்பதும்;

2. (அ) இக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) 95 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு முப்பத்தொன்றுக்கு (31) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது, —

(அ) அதன் நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) தனது குழுவின் முன் தேன்றும்படி எவரேனும் நபரை அழைப்பதற்கும், ஏதேனுமோர் பத்திரத்தை அல்லது அறிக்கையை வரவழைப்பதற்கும், பாராளுமன்றத்தில் அல்லது தனது குழுவின் முன் தோன்றுமாறு கட்டளையிடுவதற்கும் அத்தகைய நபரின் பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் பதிவேட்டினை, புத்தகத்தை, அறிக்கையை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சியாளர்களை வாய்மூலமாக விசாரிப்பதனூடாக திட்பநுட்பத் தன்மையை விசாரித்தறியவும் அல்லது வேறுவிதமாக உறுதிசெய்து கொள்ளவும் குழுவின் தவிசாளர் அல்லது அப்பணிக்கென விசேடமாக தத்துவமளிக்கப்பட்ட ஒருவரால் சத்தியம் செய்யப்பட்ட சாட்சியாளர்களை விசாரணை செய்வதற்கும்;

(ஈ) குழுவின் உதவிக்கென உரிய துறைகளின் சிறப்பறிவுள்ள நபர்களின் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்,

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பராளுமன்ற ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும்

அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

பா.150/11

16.

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ பி. ஹரிசன்

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ (திருமதி) அனோமா கமகே

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ (கலாநிதி) ஹர்ச த சில்வா

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2011 திசெம்பர் 1 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கை மூலமாக கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் நட்டம் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் அவற்றை சீர்செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரை செய்து அறிக்கை செய்வதற்குமான பாராளுமன்றத் தெரிகுழு,—

மனித வளங்கள் அமைச்சரும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE ) தவிசாளருமான கௌரவ டியூ குணசேக்கர அவர்களால் குழுவின் அறிக்கை 2011 திசெம்பர் 1 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருப்பதனாலும்

பல நிறுவனங்களும் அரசிற்குச் சொந்தமான பல பொறுப்பு முயற்சிகளும் நட்டத்தில் இயங்குவதாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை கோடிட்டுக் காட்டுவதனாலும்;

இந்த நிறுவனங்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
2. இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
3. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
4. ஸ்ரீ லங்கன் விமானச் சேவை
5. மிஹின் எயார் லிமிடெட்
6. இலங்கை துறைமுக அதிகார சபை
7. வீதி அபிவிருத்தி அதிகார சபை

ஆகிய நிறுவனங்கள் காணப்படுவதாலும்,

இலங்கை கிரிக்கெட் வங்குரோத்து நிலையயை அடைந்திருப்பதாகவும் அதனை இலங்கை அரசாங்கம் மீட்டெடுக்க வேண்டும் எனவும் தெரியவந்திருப்பதனாலும்;

இந்த நட்டங்கள் இலங்கையின் நிதி நிலைமைக்கு பாரிய இழப்பாகும் என்பதனாலும்;

இந்த நிறுவனங்களைப் பராமரிக்கின்ற மற்றும் மீட்டெடுக்கின்ற செலவினம் இறுதியில் பொதுமக்களினாலேயே தாங்கிக்கொள்ளப்பட வேண்டியிருப்பதனாலும்;

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அதிகாரங்கள் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதற்கு அவற்றினை மட்டுப்படுத்துவதுடன் ஆய்ந்தறிந்தவைகள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்வித வகிபாகத்தினையும் அதற்கு வழங்கவில்லை என்பதனாலும்,

(அ) அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் குறிப்பாக இங்கு பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் நட்டத்திற்கான காரணங்களை நிர்ணயிப்பதற்காக அவற்றின் விவரங்களை ஆராய்வதற்கும்,

(ஆ) இந்த நிறுவனங்களின் தவறான முகாமைத்துவத்திற்கு யாராவது தனிநபர் அல்லது தனிநபர்கள் பொறுப்பாக உள்ளனரா அல்லது அவர்கள் மோசடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனரா என்பதை நிர்ணயிப்பதற்கும்

(இ) இந்த நட்டங்கள் தொடர்ச்சியாக ஏற்படுவதைத் தடுப்பதற்கும்

(ஈ) இவற்றிற்குப் பொறுப்பாக உள்ளவர்களைத் தண்டிப்பதற்கு முதலில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதைப் பரிந்துரைப்பதற்கும்

(உ) இந்த இழப்புக்களை ஈடுசெய்வதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கும்

(ஊ) பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை தாபித்தல் உள்ளடங்கலாக அறிக்கையிலுள்ள விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கு அவசியமான மேலதிக சட்டங்கள் யாவை என்பதை நிர்ணயிப்பதற்கும்

பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இச்சபை தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எதுவாக இருந்த போதிலும், குழுவானது இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா. 156/ ’12

17.

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ எம்.ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ கபீர் ஹசீம்

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ பி. ஹரிசன்

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— 2011 ஆண்டிற்கான கல்வி உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை பரிசீலித்து அவை செம்மையாக்கப் பரிகாரம் காண்பதற்குரிய வழிவகைகளை விதந்துரைப்பதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

2011 கல்வியாண்டிற்கான உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டமை பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதாலும்;

பல்வேறு தரப்பினால் முரண்பாடான கூற்றுகள் வெளியிடப்படுவதனாலும், மேலும் பிரச்சினைகள் தொழில்நுட்பக் குழுவினால் ஏற்பட்டது என சில தரப்பினர் கூறுவதனாலும்;

பெறுபேறுகளை தேவையற்ற விதத்தில் அவசரமாக வெளியிட்டமை மீது இன்னும் சிலர் குறை கூறுவதாலும்;

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் ஆற்றலின்மைதான் பிரச்சினை என இன்னும் சிலர் குறை கூறுவதாலும்;

பரீட்சை ஆணையாளர் அவரின் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளமையாலும்;

இவ்விடயத்தினை விசாரிப்பதற்கு சனாதிபதியே ஒரு ஆணைக்குழுவினை நியமதித்துள்ளதாலும்;

முழு மாணவ பரம்பரையின் எதிர்காலமே அபாயநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையினாலும்;

இதனால் கல்வி முறைமை மீதுள்ள நம்பிக்கை மோசமாகக் சீர்குலைந்துள்ளமையினாலும்; மேலும்

கல்வித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளல் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளமையினாலும்;

(அ) ‘ Z ’ புள்ளியின் முறைமையைப் பரீட்சிப்பதற்கும்;

(ஆ) இப் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்ற காரணங்களைப் பரிசீலிப்பதற்கும்;

(இ) 2011 கல்வியாண்டிற்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளைச் செம்மையாக்கப் பரிகாரம் காண்பதற்குரிய வழிவகைகளை விதந்துரைப்பதற்கும்;

(ஈ) இவ்வாறான பிரச்சினைகள் எதிர்காலத்தில் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

(உ) குழு அவசியம் எனக் கருதும் ஏனைய பரிகார நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறாக இருப்பினும் குழுவானது இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்

(ஆ) ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறும் அத்தகைய ஆளிடம் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறும் கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சிகளை வாய்மொழி மூலம் மெய்ப்பிப்பதற்கும் அல்லது வேறுவிதமாக உறுதிப்படுத்துவதற்கும் சாட்சிகளை விசாரணை செய்யும் நோக்கத்துக்காக குழுவின் தவிசாளர் அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆள் நிருவகிக்கும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்கு உதவுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த வல்லுனர்வுகளின் நிபுணர்களின் சேவைகளைப் பெறுவதற்கும்;

(உ) காலத்திற்கு காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அத்துடன் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைப்படாது கூடுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதல் அமர்வுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தில் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பா.157/ '12

18.

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ சஜித் பிரேமதாஸ

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ புத்திக பதிரண

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ ஆர். எம். சஞ்சித் மத்துமபண்டார

கௌரவ அசோக் அபெசிங்க

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ (திருமதி) அனோமா கமகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ வசந்த அலுவிஹாரே

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ ஜயந்த கெடக்கொட

கௌரவ சுஜீவ சேனாசிங்க

கௌரவ அர்ஜுன ரணதுங்க

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ துனேஷ் கன்கந்த

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ டபிள்யூ.டீ. ஜே. செனெவிரத்ன அவர்கள் மீது நம்பிக்கையின்மை,—

தற்போது இந்த நாட்டில் சுமார் 40,000 இற்கும் அதிகமான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர் என்பதனாலும்;

மேற்படி வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலைகள் வழங்கும் போது முறைசார்ந்த மற்றும் நியாயமான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படாமையினாலும்;

அரசாங்கத்தினால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் போது அரசியல் நட்பு முறைகள், குடும்ப தொடர்புகள், வேறு உறவு முறைகள் என்பனவற்றை காரணமாகக் கொண்டு வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனாலும்;

"அரசியல் பட்டியல்கள்" மூலம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகள் வழங்குதலானது, அநீதியானதும் முறைசாரர்பற்றதும் என்பதோடு அரசாங்க வேலைகளுக்கு ஆட்சேர்ப்புக்கான எற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையினை முற்றிலும் மீறப்படுவதாக அமைந்துள்ளதினாலும்;

அரசியல் பக்கச்சார்பினைக் கருத்திற்கொண்டு அரசாங்க வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் அரசியலமைப்பின் 12(1) உறுப்புரையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதனாலும்;

அரச கொள்கைகளை செயற்படுத்தும் கோட்பாடுகளின் 27(2)(அ) உறுப்புரையின் மூலம் அடிப்படை உரிமைகளை அவ்விதமாகவே செயற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதனாலும்;

இவ்வாறு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு காரணமாக அமைந்துள்ள விடயங்கள் தொடர்பில் நியாயமான விளக்கம் அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் தவறியிருப்பதனாலும்;

வேலையற்ற பட்டதாரிகளை இவ்வாறு கவனிப்பது, இந்த நாட்டின் இளைஞர்களை வெறுமனே அரசியல்வாதிகளின் பின்னால் செல்லும் குழுவினராக மாற்றும் அடிப்படை நோக்குடன் செயற்படுத்தப்படும் ஒரு செயலாகக் கருதப்பட முடியும் என்பதனாலும்;

அரசாங்க சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கையில், போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடாது நேர்முகப் பரீட்சை மூலம் அவர்களை ஆட்சேர்த்து, பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவதன் மூலம், அரசாங்க சேவையின் ஆட்சேர்த்தல் தொடர்பில் எந்தவித வெளிப்பாட்டுத்தன்மையும் காணப்படாமையினால், நாட்டில் உள்ள பெரும்பான்மையான படித்த இளைஞர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதனாலும்;

அரச உத்தியோகத்தர்களை நியமித்தல், இடம் மாற்றல், பதவி உயர்த்துதல் தொடர்பிலான சுயாதீன அரச தாபனமான பகிரங்க சேவை ஆணைக்குழுவினை, சுயாதீனமாக இயக்குவதற்கான வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளதனாலும்;

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ. டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன மீது சபை நம்பிக்கை இழந்துள்ளதென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்து.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.